தமிழ்நாடு ● மகளிர் மேம்பாட்டு

# முற்றம்

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மாத இதழ்

விலை ரூ. 5/– மலர் 13 இதழ் 3 ஜூலை 2011

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

## தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின்

## மகத்தான செயல்பாடுகள்



> அரசின் பல்வேறு துறைகளின் மூலம் செயல்படுத்தப்படும் நலத் திட்டங்களின் பலன்களை மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் குழுக்களை ஒருங்கிணைக்கும் நடவழிக்கையில் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் ஈடுபட்டுள்ளது. இந்த ஒருங்கிணைப்பின் வாயிலாக மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் பொருளாதார ரீதியாக மேலும் வளர்ச்சி பெற முடியும்.

**டாக்டர். K. கோபால், இ.ஆ.ப.,**
**மேலாண்மை இயக்குநர்,**
**தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்.**

ஏழை எளிய மகளிர் பொருளாதாரச் சுய சார்பு பெற்று தங்கள் வாழ்வில் முன்னேற்றம் காணவும், தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வளம் பெற்றிடவும் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் ஆக்கப்பூர்மான திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. அனைத்து மாவட்டங்களிலும் செயல்படும் மகளிர் திட்ட செயலாக்க அலகுகள் மகளிர் நல மேம்பாட்டிற்காக அயராது உழைத்து வருகின்றன.

புதிய மகளிர் சுய உதவிக் குழுக்கள் அமைத்தல், அடிப்படை பயிற்சிகள், நிர்வாகப் பயிற்சிகள் மற்றும் தொழிற்பயிற்சிகள் போன்றவற்றை வழங்குதல், குழுக்களை தர மதிப்பீடு செய்தல், சுழல் நிதி, பொருளாதாரக் கடன், நேரடிக் கடன் போன்றவற்றை பெற்றுத் தருதல், குழு உறுப்பினர்கள் சுய தொழில் துவங்குவதற்கு உதவுதல், இளைஞர் தொழிற்திறன் பயிற்சித் திட்டத்தின் கீழ் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு பிரபல நிறுவனங்களில் இலவசமாக தொழிற்பயிற்சிகள் அளித்து, வேலைவாய்ப்புகள் பெற்றுத் தருதல், கூட்டமைப்புகளை அமைத்தல், அவைகளை மறுசீரமைத்து, பெருங்கடன் பெற்றுத் தருதல் போன்ற நடவடிக்கைகளில் மகளிர் திட்ட செயலாக்க அலகுகள், தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து ஈடுபட்டு வருகின்றன.

கிராமப்புற ஏழை மகளிர் தங்களின் அத்தியாவசித் தேவைகளுக்காக கந்து வட்டிக்காரர்களிடம் அதிக வட்டிக்கு கடன் பெறுவதை தவிர்க்கும்வண்ணம், அரசுடமையாக்கப்பட்ட வங்கிகள் மூலம் குறைந்த வட்டியில் கடன் பெற்றுத் தர முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை மதிப்பேற்றம் செய்து அதிக இலாபத்திற்கு விற்பனை செய்திடவும், அவர்களின் உற்பத்திப் பொருட்களுக்கு விற்பனை வாய்ப்பு ஏற்படுத்தித் தரவும் பல்வேறு விற்பனைக் கண்காட்சிகள் நடத்தப்படுகின்றன.

மகளிர் மேம்பாட்டிற்காக சீரிய முறையில் செயலாற்றி வரும் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் ஆக்கபூர்வ ம ான நடவடிக்கைகளில் அனைத்து மகளிர் சுய உதவிக் குழுக்களும் பங்கு கொண்டு, தங்களின் வாழ்வில் வளம் சேர்க்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**மேலாண்மை இயக்குநர்**

# உள்ளே...


## கடிதங்கள் – 3

மகளிர் சுய உதவிக் குழுக்களின் வெற்றிக் கதைகள் அனைத்தும் மிகவும் சிறப்பாக இருந்தது. மகளிர் சுய உதவிக் குழுக்களின் செயல்பாட்டிற்கு ஊக்கம் அளிக்கும் வகையில் இக்கட்டுரைகள் இருந்தன.

## வெற்றிக் கதை – 4

இன்று இக்குழுவின் உறுப்பினர்கள் அழகிய பொம்மைகள், இயற்கை காட்சிகள் நிறைந்த ஓவியங்கள், படங்களுக்கு பிரேம் போடுவது போன்ற தொழில்களில் ஈடுபட்டு வருவாய் ஈட்டி வருகின்றனர்.

## சிறப்புக் கட்டுரை – 6

சுய உதவிக் குழு மகளிரை ஒருங்கிணைத்து பல்வேறு அரசுத் துறைகள், வங்கிகள் மற்றும் தனியார் அமைப்புகளில் மகளிருக்கு உரிய வாய்ப்பை பெற்றுத்தர முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

## மாவட்டச் செய்திகள் – 12

பொருளாதார வளர்ச்சி பெற்று வரும் குருக்கள் மடம் 1, 2, 3 மற்றும் 4 ஆகிய மகளிர் சுய உதவிக் குழுக்கள் தங்கள் கிராமத்தின் முன்னேற்றத்திற்கும் பாடுபட்டு வருகின்றனர்.

## கூட்டமைப்புகள் – 18

கூட்டமைப்புகளுக்கு நிர்வாக ரீதியாக அங்கீகாரம் அளித்திடும் பொருட்டு குழுக்களின் தரம் மதிப்பீட்டுக் குழுவில் அதன் பிரதிநிதித்துவம் இருக்கும் வகையில் வழி வகை செய்யப்பட்டது.

## வாழ்ந்து காட்டுவோம் – 27

முதலில் கூலி வேலைக்கு சென்ற நாங்கள் இப்போது சுயமாக சம்பாதித்து வருகிறோம் என்பதை நினைக்கும் போது எங்களுக்கு வாழ்க்கையில் ஒரு நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு

# முற்றம்

மலர் 13 இதழ் 3 ஜுலை 2011 விலை ரூ. 5/-

கௌரவ ஆசிரியர்
டாக்டர். K. கோபால், இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்
தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்

■

ஆசிரியர்
திரு. எஸ். சின்னப்பன்
செயலர், முற்றம்

■

நிர்வாக ஆசிரியர்
திருமதி. எம். மாதவி
பொது மேலாளர் (பொறுப்பு)

■

ஆசிரியர் குழு
திருமதி. ஆர். வி. ஷஜீவனா
கூடுதல் திட்ட இயக்குநர்
வாழ்ந்து காட்டுவோம் திட்டம்

திருமதி. மாலதி ஹெலன்
தகவல் தொடர்பு வல்லுநர்
வாழ்ந்து காட்டுவோம் திட்டம்

■

பொறுப்பாசிரியர்
திருமதி. அ. அமுதா
மக்கள் தொடர்பு அலுவலர் (பொறுப்பு)

■

அனுப்புகை உதவியாளர் - முற்றம்
திரு. ஏ. கண்ணன்

■

கணக்கர்
திருமதி. சு. சசிகலா

■

கணினி வடிவமைப்பு
திரு. சு. ஸ்ரீ ராம்

■

பிழை திருத்துபவர்
திரு. எஸ். எஸ். ரவிச்சந்திரன்

■

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :
ஆசிரியர், ‘முற்றம்’
தபால் பெட்டி எண். 3226
100, அண்ணா சாலை, கிண்டி,
சென்னை - 600 032.
தொலைபேசி: 044-42085804/05/06
தொலைநகல்: 044-4202 7635,
044-2235 2751

www.tamilnaduwomen.org/mutram
wdcmutram@yahoo.com
wdcmutram@gmail.com

■

முற்றம் இதழ் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது

## ஆசிரியரிடமிருந்து

### பாராட்டுதற்குரிய பசுமை வீடுகள்!

அன்புள்ள வாசகர்களுக்கு,

புதியதாக அமைந்துள்ள தமிழக அரசு பல்வேறு வளர்ச்சித் திட்டங்களையும், நலத் திட்டங்களையும் தீட்டி வருகிறது. மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கும் புதுமையான திட்டங்கள் அறிமுகப்படுத்தப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. சுற்றுப்புறச் சூழலை பாதுகாக்கும் வகையிலும், மின்சார பற்றாக்குறையை போக்கும் வகையிலும், சூரிய வெப்பத்தை பயன்படுத்தி மின் உற்பத்தி செய்வதற்கும், இயற்கை சீற்றங்கள் மற்றும் சுற்றுப்புற சூழல் ஆகியவைகளால் பாதிக்கப்படாத பசுமை வீடுகள் கட்டுவதற்கும் அரசு திட்டங்கள் வகுத்து வருவது பாராட்டத்தக்கது.

வீட்டை சுற்றியுள்ள காலியிடங்களில் மரங்களையும் செடிகளையும் வளர்ப்பது, வீட்டின் கூரை மீது விழுந்து வெளியேறும் மழை நீரை சேகரிப்பது, புகையில்லா அடுப்பை பயன்படுத்துவது, சூரிய வெப்பத்தின் மூலம் மின்சாரம் தயாரித்து மின் சாதனங்களைப் பயன்படுத்துவது, பிளாஸ்டிக் பொருட்களை தவிர்ப்பது, மக்கும் குப்பை மக்கா குப்பை என தனித்தனியாக பராமரிப்பது, மண்பாண்டங்களை உபயோகிப்பது, குளிர்சாதனப் பெட்டிகள் உபயோகிப்பதை தவிர்ப்பது, கழிவு நீர் தேங்காமல் அவற்றை சுழற்சி செய்து பயன்படுத்துவது போன்றவைகளை உள்ளடக்கியதுதான் பசுமை வீடுகள் எனப்படுவது.

இதுபோன்ற வீடுகளை கட்டுவதற்கு அரசாங்கம் திட்டமிட்டிருப்பது பாராட்டுக்குரியது. இதற்கு மக்களின் ஒத்துழைப்பும், பங்கேற்பும் மிக மிக அவசியமானவையாகும். அரசிடம் மட்டுமே இவைகளை எதிர்பார்க்காமல், சுய உதவிக் குழு உறுப்பினர்கள் சுய முயற்சி எடுத்து பசுமை வீடுகளை அமைத்துக் கொள்வதற்கு உங்கள் குழுக்களில் திட்டமிடலாம். இதுபோன்ற பசுமை வீடுகளை அமைத்துக் கொள்வதால் குடும்ப உறுப்பினர்களுக்கு குறிப்பாக குழந்தைகளுக்கு சுகாதாரமான வாழ்க்கை அமையும். அதோடு சுற்றுப்புறச் சூழலும் பாதுகாக்கப்படும்.

பருவமழை தொடங்கி விட்ட இந்த காலகட்டத்தில், மிக சீரிய முறையில் செயல்படுத்த வேண்டிய முக்கிய இரண்டு செயல்களாகிய மழை நீரை சேகரிக்கும் தொட்டிகளை அமைத்தல், மரங்களை நடுதல் ஆகியவற்றிற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் சுற்றுச்சூழலை பாதுகாத்து இயற்கை சீற்றங்களையும், அதனால் ஏற்படும் அழிவுகளையும் குறைத்துக் கொள்ள முடியும்.

இப்படிக்கு

(எஸ். சின்னப்பன்)
முற்றம் ஆசிரியர்



## மிகவும் பயனுள்ளது!

மகளிர் சுய உதவிக் குழுக்களின் முன்னேற்றத்திற்காக பல்வேறு செய்திகளைத் தாங்கி வரும் முற்றம் இதழினைப் படித்தேன். ரசித்தேன். மிகவும் பயனுள்ளதாக உள்ளது.

மேலும் பதிவேடுகள் பராமரிப்பது குறித்த கட்டுரை மிகவும் சிறப்பாக இருந்தது. உடல் நலம், வணிகம், சிறப்புக் கட்டுரை போன்றவையும் மிகவும் பயனுள்ளவை. முற்றம் இதழ் பாதுகாத்து வைக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

இப்படிக்கு,
திருமதி. கல்யாணி அங்கப்பன்
நேரு மகளிர் மன்றம்,
குமாரபாளையம்,ஈரோடுமாவட்டம்.

## வாழ்த்துகள் பல!

கடந்த மாத முற்றம் இதழில் இடம் பெற்றிருந்த மகளிர் சுய உதவிக் குழுக்களின் வெற்றிக் கதைகள் அனைத்தும் மிகவும் சிறப்பாக இருந்தது. சுய உதவிக் குழுக்களின் செயல்பாட்டிற்கு ஊக்கம் அளிக்கும் வண்ணம் இக்கட்டுரைகள் இருந்தன. கட்டுரைகளை வெளியிட்ட முற்றம் இதழிற்கு வாழ்த்துகள் பல. தொடரட்டும் முற்றம் இதழின் சீரிய பணி.

வாழ்த்துக்களுடன்,
உறுப்பினர்கள்,
வெள்ளை ரோஜா மகளிர் சங்கம்,
நெய்வேலி, கடலூர் மாவட்டம்.

## வறுமை ஒழியட்டும்!

கிராமப்புற ஏழை மக்களின் வறுமையை நீக்க வேண்டும் என்பதற்காக செயல்பட்டு வரும் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் மற்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களின் செயல்பாடுகள் குறித்து முற்றம் இதழில் வெளிவரும் செய்திகளை தொடர்ந்து படித்து வருகிறேன். ஏழ்மை ஒளிந்து வளமை பெருகவும், வாழ்த்துகிறேன். முற்றம் இதழ் மேலும் மேலும் வளரவும் வாழ்த்துகிறேன்.

அன்புடன்,
திருமதி. அங்கம்மாள் சுந்தரராஜன்
நட்சத்திரம் மகளிர் சுய உதவிக் குழு,
உமையாள்புரம், தஞ்சை மாவட்டம்.

**“மகளிர் முன்னேற்றத்திற்கு உறுதுணையாய் இருக்கும் முற்றம் இதழிற்கு சந்தா செலுத்தி உறுப்பினர்களாகி முற்றம் இதழ் மேலும் மேலும் சிறப்பாய் வளர வாழ்த்துங்கள்!”**

கவிதை, உடல் நலக் குறிப்புகள், சிறப்புக் கட்டுரைகள், தங்கள் பகுதியில் நடைபெறும் சுய உதவிக் குழுக்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் போன்றவற்றை சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தக்க புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளில் தகுதி வாய்ந்தவைகள் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். மேலும் சுய உதவிக் குழுக்களின் வெற்றிக் கதைகள், குழுவின் செயல்பாடுகள் போன்றவற்றையும் புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளும் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும்.

– ஆசிரியர், முற்றம்

மின்னஞ்சல் : wdcmutram@yahoo.com wdcmutram@gmail.com

வெற்றிக் கதை

கலைநயம் மிகுந்த பொருட்களுக்கு

# இணைந்த கைகள் மகளிர் சுய உதவிக் குழு

விருதுநகர் மாவட்டத்தில் செயல்பட்டு வரும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டு வருகின்றன. அவற்றுள் இணைந்த கைகள் மகளிர் சுய உதவிக் குழுவின் செயல்பாடுகள் பாராட்டுதலுக்குரியதாகும். இக்குழுவின் உறுப்பினர்களுக்கு மகளிர் திட்டம் பல்வேறு பயிற்சிகளை அளித்து, சுழல் நிதி, பொருளாதாரக் கடன், நேரடிக் கடன் போன்றவற்றையும் பெற்றுத் தந்துள்ளது. இன்று இக்குழுவின் உறுப்பினர்கள் அழகிய பொம்மைகள், இயற்கை காட்சிகள் நிறைந்த ஓவியங்கள், படங்களுக்கு பிரேம் போடுவது போன்ற தொழில்களில் ஈடுபட்டு வருவாய் ஈட்டி வருகின்றனர்.

பல்வேறு இடங்களில் நடைபெறும் விற்பனைக் கண்காட்சிகளில் அரங்குகள் அமைத்து தங்களின் பொருட்களை விற்பனை செய்து வருகின்றனர். பல்வேறு தொலைகாட்சிகள் மற்றும் நாளிதழ்களிலும் இக்குழுவினரின் செயல்பாடுகள் குறித்த செய்திகள் வெளிவந்துள்ளன. வெளிநாட்டில் இருந்து நம் நாட்டிற்கு வரும் சுற்றுலாப் பயணிகள் கூட இக்குழுவின் பொருட்களைக் கண்டு வியந்து வாங்கிச் செல்கின்றனர். பொருட்கள் உருவாகும் விதம் குறித்த விபரங்களை அறிந்து கொள்கின்றனர்.

ஏழை குழந்தைகளுக்கு கல்விக்கு உதவுதல், முதியோர், ஆதரவற்றோர், மாற்றுத் திறனாளிகள் போன்றோருக்கு உதவுதல், அரசு நலத் திட்ட உதவிகளை பெற்றுத் தருதல், சுற்றுப்புற சுத்தம் பேணுதல் போன்ற சமூக நல செயல்பாடுகளில் இணைந்த கைகள் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் ஆர்வத்துடன் பங்கு கொள்கின்றனர்.

மேலும் பலருக்கு தாங்கள் உற்பத்தி செய்யும் பொருட்கள் குறித்த பயிற்சியை அளித்து, அவர்களையும் சுய தொழில் மேற்கொள்ள செய்தல், தாங்கள் செய்யும் தொழிலை விரிவுபடுத்தி பலருக்கு வேலைவாய்ப்பு அளித்தல் போன்றவை இக்குழுவின் எதிர்கால திட்டங்களாகும்.

வண்ண வண்ண கால்மிதியடிகள் தயாரிக்கும்

# மல்லிகை மகளிர் சுய உதவிக் குழு

பல்வேறு இயற்கை வளங்களும் நிறைந்த தேனி மாவட்டத்தில் செயல்பட்டு வருவது மல்லிகை மகளிர் சுய உதவிக் குழு. ஏழை எளிய குடும்பத்தை சேர்ந்த மகளிரை உறுப்பினர்களாகக் கொண்டு செயல்பட்டு வருவது இக்குழுவாகும். மகளிர் திட்டத்தின் வாயிலாக பெற்ற அடிப்படை பயிற்சிகளும், நிர்வாகப் பயிற்சிகளும் குழுவின் சிறப்பான செயல்பாட்டிற்கு அடித்தளமாகும். கால் மிதியடி உற்பத்தி செய்வது குறித்த தொழில் பயிற்சியினை மகளிர் திட்டத்தின் மூலம் பெற்ற இக்குழுவினர், தங்களுக்கு கிடைத்த பொருளாதாரக் கடன் தொகையினை மூலதனமாகக் கொண்டு கால் மிதியடிகள் தயாரிக்கும் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

இக்குழுவினர் உற்பத்தி செய்யும் கால்மிதியடிகள் தரமாகவும், அழகாகவும், விலை மலிவாகவும் உள்ளதால் மக்களால் மிகவும் விரும்பப்படுகிறது. பல்பொருள் அங்காடிகள் மற்றும் சிறுகடைகளுக்கு மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனை செய்கின்றனர். விற்பனைக் கண்காட்சியிலும் அரங்குகள் அமைத்து கால் மிதியடிகள் விற்பனை செய்கின்றனர்.

பெண்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் நடவடிக்கைகளை மேற் கொள்வது, அரசு வழங்கும் நலத்திட்ட உதவிகளை உரியவர்களுக்குப் பெற்றுத் தருவது, கிராம சபாக் கூட்டங்களில் பங்கு கொண்டு தங்கள் பகுதிக்கு அடிப்படை வசதிகளை பெறுவது, பள்ளி மாணவ மாணவிகளுக்கு உதவுவது போன்ற ஆக்கபூர்வமான செயல்களிலும் இக்குழுவினர் ஈடுபட்டு வருவதால் பலராலும் பாராட்டப்படும் குழுவாக மல்லிகை மகளிர் சுய உதவிக் குழு உள்ளது.

இக்குழுவினர் மற்ற குழுக்களைச் சேர்ந்தவர்களுக்கும் கால் மிதியடி தயாரிப்பது குறித்து பயிற்சியளிக்கின்றனர். பயிற்சி பெற்றவர்கள் கால் மிதியடிகள் தயாரித்து விற்பனை செய்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது

# தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் மகத்தான செயல்பாடுகள் !

“மங்கையராய்ப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திடல் வேண்டுமம்மா – பங்கயக்கைந்நலம் பார்ப்பதாலே பாரினில் அறங்கள் வளருதம்மா” என்ற கவிதை வரிகளுக்கு ஏற்ப, ஏழை எளிய மகளிர் நலனை மே ம்பாடடையச் செய்ய வேண்டும் என்ற உயரிய நோக்கத்தினைக் குறிக்கோளாகக் கொண்டு தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் செயல்பட்டு வருகிறது. இந்நிறுவனத்தின் மூலம் தமிழகத்தின் 32 மாவட்டங்களிலும் மகளிர் திட்ட செயலாக்க அலகுகள் அமைக்கப்பட்டுள்ளன. தொண்டு நிறுவனங்கள் மற்றும் வங்கிகளை இணைத்துக் கொண்டு மகளிர் மேம்பாட்டு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் 1983ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. இதன் முக்கிய நோக்கம் நகர்ப்புற மற்றும் கிராமப்புற ஏழை எளிய மகளிரை சமூக மற்றும் பொருளாதார மேம்பாடு அடையச் செய்வதே. மகளிர் சுய உதவிக் குழுக்களில் அவர்களை இணைப்பதன் மூலம் அவர்களின் வாழ்வில் பொருளாதார வளர்ச்சி அடையச் செய்ய முடியும் என்ற நோக்கத்தில் சுய உதவிக் குழு மகளிரை ஒருங்கிணைத்து பல்வேறு அரசுத் துறைகள், வங்கிகள் மற்றும் தனியார் அமைப்புகளில் மகளிருக்கு உரிய வாய்ப்பு பெற்றுத் தரப்படுகிறது.

நகர்ப்புறங்கள் மற்றும் கிராமப்புறங்களில் புதிய சுய உதவிக் குழுக்கள் அமைத்தல், பயிற்சிகள் வழங்குதல், தரப்படுத்தல், கூட்டமைப்புகளை உருவாக்குதல், திறன் வளர்ப்பு பயிற்சி அளித்தல், சுழல் நிதி, ஆதார நிதி மற்றும் வங்கிக் கடன்கள் பெற்றுத் தருதல், சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பனை செய்திட உதவுதல், அரசுத் துறைகளை ஒருங்கிணைத்தல், இளைஞர்களுக்கு தொழிற்திறன் பயிற்சி வழங்குதல் மற்றும் கூட்டமைப்புகளுக்கு பெருங்கடன்கள் பெற்றுத் தருதல் போன்றவை மகளிர் திட்டத்தின் செயல்பாடுகள் ஆகும்.

பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் (எஸ்.ஜி.எஸ்.ஒய்.) கீழ் கிராமப்புற சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி, பொருளாதார உதவிகள், உள்கட்டமைப்பு வசதிகள், சந்தைப்படுத்துதல் ஆகியவைகள் செயல்படுத்தப்படுகின்றன.

## புதிய சுய உதவிக் குழுக்கள் அமைத்தல்

ஏழை எளிய குடும்பத்தைச் சேர்ந்த 18லிருந்து 60 வயது வரையிலுள்ள மகளிரைக் கொண்டு சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்படுகின்றன. ஒரு குழுவில் 12 முதல் 20 பேர் வரை உறுப்பினர்களாக உள்ளனர். 31.03.2011 வரை 4,91,311 சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டு அதில் 76,59,682 பேர் உறுப்பினர்களாக உள்ளனர். ஆண்டுதோறும் 50 ஆயிரம் குழுக்கள் புதியதாக உருவாக்கப்படுகின்றன. மகளிர் திட்டத்தால் அங்கீகரிக்கப்பட்ட தொண்டு நிறுவனங்கள் 469 ஆகும்.

மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் வங்கியில் சேமிப்புக் கணக்குத் துவங்கி அதில் சேமித்து வருகின்றனர். இதன் காரணமாக உறுப்பினர்களின் பொருளாதார தேவைகளை நிறைவு செய்திட முடிகிறது. தற்போதைய நிலையில் குழுக்களின் மொத்த சேமிப்புத் தொகை ரூ. 2973 கோடியாகும்.

## சுய உதவிக் குழுக்களுக்கு திறன் வளர்ப்புப் பயிற்சிகள்

மகளிர் திட்டத்தின் மூலம் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களுக்கு பல்வேறு பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. தகுதி வாய்ந்த பயிற்றுநர்களைக் கொண்டு, சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களுக்கான பயிற்சிகள் 4 நாட்களும், நிர்வாகிகளுக்கான பயிற்சிகள் 6 நாட்களும் நடத்தப்படுகின்றன. இப்பயிற்சியில் தலைமைத்துவப் பண்பு, குழு ஒருங்கிணைப்பு, பதிவேடுகள் பராமரித்தல் போன்றவை குறித்து பயிற்சி அளிக்கப்படுகின்றன. இத்தகைய பயிற்சிகளை பெறுவதன் மூலம் குழுக்களை சிறப்பாக நிர்வகிக்கும் தகுதி அவர்களுக்கு கிடைக்கிறது. இப்பயிற்சியில் பங்கு பெறும் குழு உறுப்பினர்களுக்கு நாளொன்றிற்கு ரூ. 45/– உதவித் தொகையாக வழங்கப்படுகிறது.

சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பனை செய்திட உதவுதல், அரசுத் துறைகளை ஒருங்கிணைப்பதன் மூலம் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களுக்கு பல்வேறு பயன்களை பெற்றுத் தருதல், இளைஞர்களுக்குத் தொழிற்திறன் பயிற்சிகள் வழங்குதல் போன்றவை மகளிர் திட்டத்தின் முக்கிய செயல்பாடுகள் ஆகும்.

## சுழல் நிதி

தர மதிப்பீட்டில் தேர்ச்சி பெற்றக் குழுக்களுக்கு சுழல் நிதி வழங்கப்படுகிறது. மானியம் ரூபாய் 10 ஆயிரம் மற்றும் கடன் தொகை ரூபாய் 50 ஆயிரம் என மொத்தம் ரூபாய் 60 ஆயிரம் சுழல் நிதியாக வழங்கப்படுகிறது. 31.03.2011 வரை 4,47,081 சுய உதவிக் குழுக்களுக்கு ரூபாய் 447.08 கோடி சுழல் நிதி மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

## வங்கிக் கடன் இணைப்பு

சுய உதவிக் குழுக்கள் தொழில் நடவடிக்கையில் ஈடுபடவும், பொருளாதார வளர்ச்சி பெறவும் வங்கிக் கடன்கள் வழங்கப்படுகின்றன. முதல் தர மதிப்பீட்டில் தேர்ச்சி பெறும் குழுக்கள் சுழல் நிதி மற்றும் வங்கிக் கடன் இணைப்பிற்கு தகுதி பெறுகின்றன. குழுக்களுக்கு அவைகள் மேற்கொள்ளும் தொழில்களின் அடிப்படையில் கடன்கள் வழங்கப்படுகின்றன. சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிகள் வழங்கியுள்ள மொத்தக் கடன் இணைப்புத் தொகை ரூபாய் 11,603.83 கோடியாகும்.

## ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள்

மகளிர் சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகள் மேலும் சிறப்படைய வேண்டும் என்ற நோக்கில் அவைகள் கூட்டமைப்பாக இணைக்கப்படுகின்றன. இக்கூட்டமைப்புகளில் 10 முதல் 100 வரையிலான குழுக்கள் உறுப்பினர்களாக உள்ளன. கூட்டமைப்பாக செயல்படுவதன் மூலம் சுய உதவிக் குழுக்கள் மேலும் சிறப்பான வளர்ச்சியினை அடைய முடியும். புதிய சுய உதவிக் குழுக்களை அமைக்க உதவுதல், பல்வேறு பயிற்சிகள் வழங்குதல், சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்த உதவுதல் போன்ற செயல்பாடுகளில் ஈடுபட்டு வருகிறது. மேலும் வங்கியில் பெருங்கடன் பெற்று உறுப்பினர் குழுக்களுக்கு வழங்கும் நிதி இடையீட்டாளர் பணியினையும் கூட்டமைப்புகள் மேற் கொண்டு வருகின்றன. இதன் மூலம் ரூபாய் 25 இலட்சம் முதல் ரூபாய் 75 இலட்சம் வரையிலான கடன் தொகையினை கூட்டமைப்புகள் பெற்று குழுக்களுக்கு வழங்குகின்றன.

## நகர்ப்புற சுய உதவிக் குழுக்கள்

நகர்ப்புறப் பகுதிகளில் வசிக்கும் ஏழை எளிய மகளிரைக் கொண்டு சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்படுகிறது. பகுதி அளவிலான அமைப்பு மற்றும் குடிசைப் பகுதி அளவிலான அமைப்பு என்று இரு பிரிவுகளில் குழுக்கள் அமைக்கப்பட்டு, அவைகளுக்கும் சுழல் நிதி வழங்கப்படுகிறது.

## இளைஞர் தொழிற்திறன் பயிற்சி

தமிழகத்தில் பெருகி வரும் தொழில் அமைப்புகளின் தேவைக்கேற்ப தகுதி வாய்ந்த பயிற்சி பெற்ற இளைஞர்களின் தேவையும் அதிகரித்து வருகிறது, இதைக் கருத்தில் கொண்டு தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் இளைஞர் தொழிற்திறன் பயிற்சித் திட்டத்தின் வாயிலாக வேலைவாய்ப்பற்று இருக்கும் படித்த இளைஞர்களுக்கு பிரசித்திப் பெற்ற தொழிற்நிறுவனங்கள் மற்றும் பயிற்சி நிலையங்களில் தொழிற்பயிற்சிகளும், வேலைவாய்ப்பும் அளிக்கப்பட்டு வருகிறது. மாநிலம் முழுவதும் சுமார் 256 தொழிற்பயிற்சி நிறுவனங்கள் மூலம் 45 பிரிவுகளில் பயிற்சி அளிக்கப்படுகின்றது. 30.04.2011 வரை 93,762 இளைஞர்களுக்கு தொழிற்பயிற்சிகள் அளிக்கப்பட்டு, 60,408 பேருக்கு வேலைவாய்ப்பும் பெற்றுத் தரப்பட்டுள்ளது. அனைத்து மாவட்டங்களிலும் நடைபெற்ற வேலைவாய்ப்பு முகாம்களில் கலந்து கொண்ட 28,917 நபர்களில் 7921 நபர்களுக்கு 643 தொழில் நிறுவனங்களில் வேலைவாய்ப்பு பெற்றுத் தரப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டம் (எஸ்.ஜி.எஸ்.ஒய்.)

கிராமப்புறத்தில் வசிக்கும் ஏழை எளிய மக்களின் வறுமையை நீக்கும் நோக்கத்துடன் பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டம் (எஸ்.ஜி.எஸ்.ஒய்.) செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்திற்கு மத்திய அரசு 75 விழுக்காடும் மாநில அரசு 25 விழுக்காடும் நிதி உதவி செய்கிறது. இத்திட்டத்தின் கீழ் கிராமப்புறங்களில் ஏழை எளிய மக்களை உறுப்பினர்களாக் கொண்டு சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்படுகிறது. தொழிற்பயிற்சிகள் வழங்கப்பட்டு, சுழல் நிதி மற்றும் கடன் வசதிகள் ஏற்படுத்தித் தரப்படுகின்றன. பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான உதவிகளும் செய்யப்படுகின்றன.

## மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்துதல்

சுய உதவிக் குழுக்கள் தாங்கள் உற்பத்தி செய்யும் பொருட்களின் விற்பனையை மேம்படுத்தும் வகையில் மாநில, மாவட்ட மற்றும் வட்டார அளவில் விற்பனைக் கண்காட்சிகள் நடத்தப்படுகிறது. திருவிழாக் காலங்கள் மற்றும் முக்கிய நிகழ்ச்சிகள் நடைபெறும் சமயங்களில் இக்கண்காட்சிகள் நடத்தப்படுகின்றன.

சென்னையில் ஆண்டுதோறும் நவராத்திரி, கிருஸ்துமஸ், புத்தாண்டு, பொங்கல் ஆகிய திருவிழாக் காலங்களில் விற்பனைக் கண்காட்சிகள் நடத்தப்படுகிறது. இவ்விற்பனைக் கண்காட்சிகளில் தமிழ்நாட்டின் 32 மாவட்டங்களிலும் செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் தாங்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பனைக்கு வைக்கின்றன. இவ்வகையில் 2010–2011ஆம் ஆண்டு நடைபெற்ற விற்பனைக் கண்காட்சியில் ரூபாய் 3.91 கோடிக்கு விற்பனை செய்து சாதனை படைக்கப்பட்டுள்ளது.

மேலும் 29 மாவட்டத் தலைநகரங்களிலும் பூமாலை வணிக வளாகங்கள் ரூபாய் 8.12 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளன. 256 கடைகள் கொண்ட 22 கூடுதல் கட்டடங்களும் கட்டப்பட்டுள்ளன. ஊரகப் பகுதிகளில் விற்பனையை மேம்படுத்தும் வகையில் 90 கிராமச் சந்தைகள் (ஒவ்வொரு மாவட்டத்திற்கும் மூன்று வீதம்) கட்டப்பட்டுள்ளது.

சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்த ரூபாய் 15.33 கோடி மதிப்பீட்டில் சென்னை வள்ளுவர் கோட்டம் அருகில் 'அன்னை தெரசா மகளிர் வளாகம்' கட்டப்பட்டுள்ளது. இதில் ஆண்டுதோறும் திருவிழாக் காலங்களில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்திப் பொருட்களின் விற்பனைக் கண்காட்சி நடத்தப்படுகின்றது.

## சுய உதவிக் குழுக்களை ஒருங்கிணைத்தல்

அரசுத் துறைகளான வருவாய்துறை, சமூக நலத்துறை, ஆதிதிராவிடர் நலத்துறை, தோட்டக்கலை, கால்நடைத்துறை, தொழில் துறை, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, வனத்துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை போன்றத் துறைகளின் நலத் திட்டங்களை மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் பயன்படுத்தி, குடும்ப அட்டை பெறுதல், பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் சுழல் நிதி மற்றும் தொழிற்கடன் பெறுதல், தொழிற்பயிற்சி பெறுதல், ஆதிதிராவிடர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினருக்கான நலத் திட்ட உதவிகளைப் பெறுதல், நியாய விலைக் கடைகளை ஏற்று நடத்துதல், வேளாண்மையில் ஈடுபடுதல், கறவை மாடுகள் மற்றும் கால்நடைகள் வாங்க கடனுதவி பெற்று பால் உற்பத்தியில் ஈடுபடுதல் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் பொருளாதார முன்னேற்றம் பெற வழிவகை செய்யப்பட்டு வருகிறது.

மகளிர் திட்டம்! – உங்கள் உள்ளங்களிலும் இல்லங்களிலும்!!

தூத்துக்குடி மாவட்டம்

## விருப்பக் கண்காட்சி

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் 'வைகாசி விசாகம்' திருவிழாவை முன்னிட்டு மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்திப் பொருட்கள் விருப்பக் கண்காட்சி நடைபெற்றது. இக்கண்காட்சியினை தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

திருச்செந்தூர், தூத்துக்குடி மற்றும் திருவைகுண்டம் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த சுய உதவிக் குழுக்களும், விருதுநகர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களைச் சேர்ந்த மகளிர் சுய உதவிக் குழுக்களும் கலந்து கொண்டு, தாங்கள் உற்பத்தி செய்த மண் பொம்மைகள், மென் பொம்மைகள், துரித உணவு வகைகள், ஊறுகாய் வகைகள், சத்து மாவு, தோல் பைகள் மற்றும் கைவினைப் பொருட்களை விற்பனைக்கு வைத்திருந்தன. ஏழு நாட்கள் நடைபெற்ற இக்கண்காட்சியில் சுமார் ரூபாய் 9,86,750/– மதிப்பிலான பொருட்கள் விற்பனை செய்யப்பட்டன தூத்துக்குடி மாவட்ட மகளிர் திட்ட அலுவலர் (பொ), உதவித் திட்ட அலுவலர்கள், ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர், அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.

கடலூர் மாவட்டம்

## பட்டு வளர்ப்பு தொழிலில் அன்னை சாரதா மகளிர் குழு

கடலூர் மாவட்டம், விருதாசலம் ஒன்றியம், சிறுவம்பார் ஊராட்சியில் அன்னை சாரதா மகளிர் சுய உதவிக் குழு செயல்பட்டு வருகிறது. இக்குழுவின் உறுப்பினர்களுக்கு தையல் தொழில், எம்ப்ராய்டரிங் தொழில் போன்றவைகளில் பயிற்சி அளித்து, வங்கிக் கடன் பெற்றுத் தரப்பட்டு சுய தொழில் தொடங்க வழி ஏற்படுத்தித் தரப்பட்டுள்ளது. குழுவின் சார்பாக பட்டு வளர்ப்பு தொழிலில் ஈடுபட தீர்மானிக்கப்பட்டது.

இரண்டு ஏக்கர் நிலம் வாங்கி, அதில் பட்டு வளர்ப்பு தொழிலில் ஈடுபடத் துவங்கினர். உற்பத்தி செய்யப்படும் பட்டுக் கூடுகளை சேலம் பட்டுத்துறை மூலம் விற்பனை செய்யப்படுகிறது. மேலும் மகளிர் திட்டம் DSMS மூலம் கூடுதல் விற்பனைக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டம்

# ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு !

கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட குருக்கள் மடம் என்னும் கிராமத்தில் குருக்கள் மடம் 1, 2, 3 மற்றும் 4 ஆகிய குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. வெவ்வேறு காலகட்டத்தில் துவக்கப்பட்ட இக்குழுக்கள் இன்று மிகவும் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன.

இக்குழுக்களின் உறுப்பினர்கள் இணைந்து குழுக் கூட்டத்தில் சொந்தமாக தொழில் மேற்கொள்வது குறித்து ஆலோசித்தனர். பெரும்பான்மையான உறுப்பினர்கள் விவசாயக் கூலிகள் என்பதால் விவசாயத் தொழிலினை நன்கு அறிந்திருந்தனர். எனவே நிலத்தினைக் குத்தகைக்கு பெற்று மலர் சாகுபடியில் ஈடுபடலாம் என முடிவெடுத்தனர்.

ஒவ்வொரு குழுவும் பொருளாதாரக் கடனாகப் பெற்ற ரூபாய் 3 இலட்சத்தில் ரூபாய் 1,30,000/- கொடுத்து தலா ஒரு ஏக்கர் நிலம் வீதம் நான்கு ஏக்கர் நிலத்தைக் குத்தகைக்கு வாங்கி அதில் சம்பங்கிப் பூ பயிரிட்டுள்ளனர். இதற்குத் தேவையான சம்மங்கி கிழங்கு, உரம், சாம்பல், உழவு கூலி, மருந்தடித்தல், பாத்தியங்கால் போடுதல் உள்ளிட்ட செலவுகள் என ஒவ்வொரு குழுவும் ரூபாய் 2,49,100/- வரை செலவிட்டன.

பூ பறித்தல் உட்பட அனைத்து வேலைகளையும் குழுக்களின் உறுப்பினர்களும், அவர்களின் குடும்பத்தினரும் ஆர்வத்துடன் மேற்கொள்கின்றனர். தங்கள் செய்யும் வேலைகளுக்கு ஏற்ப கூலியும் பெற்றுக் கொள்கின்றனர். கடந்த ஒன்பது மாதங்களில் 41,000/- ரூபாய்க்கு பூக்களை விற்பனை செய்துள்ளனர். செலவுகள் மற்றும் வங்கித் தவணை செலுத்தியது போக ஒவ்வொரு குழுவிற்கும் ரூபாய் 10 ஆயிரம் வரை இலாபம் கிடைத்துள்ளது. பொருளாதார வளர்ச்சி பெற்று வரும் குருக்கள் மடம் 1, 2, 3 மற்றும் 4 ஆகிய மகளிர் சுய உதவிக் குழுக்கள் தங்கள் கிராமத்தின் முன்னேற்றத்திற்கும் பாடுபட்டு வருகின்றனர்.

குருக்கள் மடம் கிராமத்தில் கள் மற்றும் போதைப்பொருட்களைசிலர்விற்பனைசெய்துவந்தனர். கிராம மக்களும், மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களும் சேர்ந்து கள் மற்றும் போதைப் பொருட்களை விற்பனை செய்யும் நபர்களுடன் கடுமையாகப் போராடி அவர்களை கிராமத்தை விட்டே விரட்டியடித்துள்ளனர். மேற்கொண்டு தங்கள் பகுதியில் கள் மற்றும் போதைப் பொருட்களின் நடமாட்டத்தையும் தடுத்து நிறுத்தியுள்ளனர்.

குருக்கள் மடம் கிராமத்தில் கூலி வேலை செய்து வாழ்க்கை நடத்தி வந்த பெண்கள் இன்று மகளிர் சுய உதவிக் குழுக்களில் உறுப்பினர்களாகி, சேமித்து, கடன் பெற்று, குத்தகைக்கு நிலம் வாங்கி பூ பயிரிட்டு மகிழ்ச்சியோடு தினந்தோறும் வேலை செய்து கூலி பெற்று வருவதோடு, பெண்களாகிய நாம் ஒற்றுமையாக செயல்பட்டால் எதையும் சாதிக்கலாம் என்பதையும் நிரூபித்துள்ளனர்.

குருக்கள் மடம் 1, 2, 3 மற்றும் 4 ஆகிய மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள், பிற குழுக்களுக்கு கூறும் ஆலோசனை என்னவென்றால், 'குழு உறுப்பினர்கள் ஒற்றுமையாக இணைந்து தொழில் செய்தால் பிறருடைய உதவியை எதிர்பார்க்காமல், பெண்களாகிய நாம நம்முடைய சொந்தக் காலில் நின்று உழைத்து முன்னேறலாம்' என்பதே.

விருதுநகர் மாவட்டம்

## ஒற்றுமையே வெற்றிக்கு வழி

விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை, நாகு ஆசாரி தெருவில் பூர்ணிமா மகளிர் மன்றம் செயல்பட்டு வருகிறது. கஸ்தூரிபா மகிளா மண்டல் தொண்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலின் கீழ் செயல்பட்டு வரும் இக்குழுவின் உறுப்பினர்கள் வங்கியில் சேமிப்புக் கணக்கு துவங்கி சேமித்து வருகின்றனர். குழு துவங்கியதிலிருந்து இதுவரை ரூபாய் 8,90,000/- வரை வங்கி நேரடிக் கடன் பெற்று முறையாகத் திரும்பச் செலுத்தி உள்ளனர். சுழல் நிதியும் பெற்றுள்ளனர்.

இப்பகுதியில் உள்ள பெண்கள் தனித்தனியாக அப்பளம் தயார் செய்து விற்பனை செய்து வந்தனர். அவர்களை குழுவாக இணைத்து செயல்பட தீர்மானிக்கப்பட்டது. மகளிர் திட்டம் மற்றும் தொண்டு நிறுவனம் ஆகியவை அளித்த ஊக்கத்தின் பேரில் மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கத்தின் வழிகாட்டுதலின்படி மோதிர அப்பளம், இலை அப்பளம் போன்றவற்றை தயார் செய்து வருகின்றனர். விருதுநகர் மாவட்டத்தின் அனைத்து பகுதிகளிலும் சந்தைப்படுத்தி விற்பனை செய்து வருகின்றனர். மேலும் ஆர்டரின் பேரிலும் அப்பளம் தயார் செய்து கொடுக்கின்றனர். தற்போது இந்தக் குழுவின் உறுப்பினர்கள் ஒவ்வொரு மாதமும் ரூபாய் 2000/- முதல் ரூபாய் 2500/- வரை வருவாய் பெற்று வருகின்றனர். மீதமுள்ள இலாபத்தை வருடம் ஒருமுறை குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் பகிர்ந்து கொள்கின்றனர்.

கூட்டு முயற்சியின் பயனாய் இக்குழுவினர் வங்கியில் கடன் பெற்று தொழில் செய்ததன் மூலம் தற்போது வறுமையில் இருந்து மீண்டு, பொருளாதார வளர்ச்சி பெற்று உள்ளனர். தங்களுக்கு பல்வேறு வகையிலும் ஊக்கமளித்த மகளிர் திட்டம், தொண்டு நிறுவனம், மாவட்ட விற்பனைச் சங்கம் மற்றும் பாண்டியன் கிராம வங்கி ஆகியவற்றிற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

சென்னை மாவட்டம்

## குடும்பத்தின் வறுமை நீங்கியது !

என் பெயர் என். ஜெகதீஷ், நான், சென்னை, திருவொற்றியூர், பொன்னியம்மன் நகர், 3வது தெருவில் வசித்து வருகிறேன். எனது குடும்பத்தில் மொத்தம் நான்கு நபர்கள் உள்ளனர். எனது தந்தையார் வண்ணம் பூசும் (Painting) வேலை செய்பவர். அவருக்கு கிடைக்கும் குறைவான கூலி எங்களது குடும்பத்திற்குப் போதுமானதாக இல்லாததால் மிகவும் வறுமையில் வாழ்ந்து வந்தோம். நான் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். ஏழ்மையான குடும்பத்தைச் சேர்ந்த என்னால் மேற்கொண்டு படிக்க இயலவில்லை.

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் இளைஞர் தொழிற்திறன் பயிற்சிகள் நடத்தப்படுகின்றன என்றும், அதில் ஏழை எளிய குடும்பத்தைச் சேர்ந்த தகுதி வாய்ந்த இளைஞர்களுக்கு இலவசமாகப் பல்வேறு தொழிற்பயிற்சிகள் அளிக்கப்பட்டு, வேலைவாய்ப்பும் பெற்றுத் தரப்படுகிறது என்ற விபரத்தை அறிந்து கொண்டேன். சென்னை மாவட்ட மகளிர் திட்ட செயலாக்க அலகின் திட்ட அலுவலர் அவர்களை அணுகி, எனக்கு இலவச தொழிற்பயிற்சி அளிக்க வேண்டி விண்ணப்பித்தேன். கனரக வாகன ஓட்டுநர் பயிற்சிக்கு என்னைத் தேர்வு செய்து, வி.ராமகிருஷ்ணா பாலிடெக்னில் பயிற்சி அளித்தார்கள். பயிற்சிக்குப் பின்னர் மகளிர் திட்டத்தின் மூலம் அரசு சான்றிதழும் பெற்றுத் தந்தனர்.

தற்போது நான் இந்தியா காமர்ஸ் அண்டு இண்டஸ்ட்ரீஸ் கம்பெனி (பி) லிமிட்டில் போர்க் லிப்ட் இயக்குபர் மற்றும் பராமரிப்பாளராகப் பணிபுரிந்து, மாத ஊதியமாக ரூபாய் 6000/- பெறுகிறேன். எனது குடும்பத்தின் வறுமை நீங்கி மகிழ்ச்சியுடன் வாழ்கிறோம். எங்கள் வாழ்வில் வளம் பெற உதவி புரிந்த தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் அவர்களுக்கும், திட்ட அலுவலர் மற்றும் உதவித் திட்ட அலுவலர்களுக்குக்கும் எனது குடும்பத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

– என். ஜெகதீஷ்,
3வது தெரு, பொன்னியம்மன் நகர்,
திருவொற்றியூர், சென்னை.

நாமக்கல் மாவட்டம்

# மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு முன்னுரிமை

நாமக்கல் மாவட்டத்தில் மகளிர் திட்டத்தின் வழிகாட்டுதலின் கீழ் ஏராளமான மகளிர் சுய உதவிக் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. அக்குழுக்களின் உறுப்பினர்கள் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டு வருவாய் பெற்று பொருளாதார வளர்ச்சி அடைந்து வருகின்றனர். வங்கிகளில் பணம் செலுத்துதல் மற்றும் பெறுதல் ஆகிய நடவடிக்கைகளில் கிராம மக்களையும் ஈடுபட செய்ய வேண்டும் என்று சமீபத்தில் பாரத ஸ்டேட் வங்கி அறிவித்திருந்தது.

இதனடிப்படையில் திருச்செங்கோடு இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மூலம் ஏமப்பள்ளி பஞ்சாயத்தில் உள்ள 8 வார்டு மக்களுக்கும் பயன்படும் வகையில் ஸ்மார்ட்டு கார்டு மூலம் பணம் செலுத்தலாம் என அறிவிக்கப்பட்டது. இந்தப் பணியை செய்வதற்கு ஏமப்பள்ளியைச் சேர்ந்தவர்களை ஈடுபடுத்தலாம் என வங்கி கருதியது. இதன்படி சமீபத்தில் ஏமப்பள்ளி கிராமத்தில் வசிக்கும் மக்களுக்கு இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் சார்பில் 250 வங்கிக் கணக்குகள் முன்பணம் ஏதுமின்றி துவங்கப்பட்டன.

இவ்வங்கியில் கணக்கு வைத்து சிறப்பாக செயல்பட்டு வருவது ஏமப்பள்ளி பஞ்சாயத்தைச் சேர்ந்த புஷ்பம் மகளிர் சுய உதவிக் குழு. இக்குழுவின் தலைவியாக இருப்பவர் திருமதி. பேபி. இவர் 10வது வகுப்பு வரை படித்துள்ளார். இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மூலம் கிராம மக்களுக்கு ஸ்மார்ட்டு கார்டு வழங்கும் திட்டத்திற்கு திருமதி பேபியை பயன்படுத்திக் கொள்ளலாம் என வங்கி நிர்வாகம் முடிவெடுத்தது. வங்கி சேவையாளர் என்ற பதவி திருமதி பேபிக்கு வழங்கப்பட்டது.

தற்போது ஸ்மார்ட் கார்டு வைத்திருக்கும் நபர்கள் திருமதி பேபியிடம் பணம் பெறவும், செலுத்தவும் முடிகிறது. நாள் ஒன்றிற்கு ஒரு நபருக்கு ரூபாய் 25 ஆயிரம் வரை வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட முடியும். இப்பணியில் ஈடுபடுவதற்காக மாதம் ரூபாய் 3,000/– ஊதியமாகவும் மற்றும் ஊக்கத் தொகையாகவும் திருமதி பேபி பெறுகிறார். இதன் மூலம் திருமதி பேபியின் குடும்ப வருமானமும், வாழ்க்கைத் தரமும் உயர்ந்து வருகிறது.

புதுக்கோட்டை மாவட்டம்

# ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், பூவரசக்குடி ஊராட்சியில் உள்ள முல்லை, செவ்வந்திப்பூ, குறிஞ்சி, ரெட்ரோஸ், சந்தன முல்லை மற்றும் பவளமல்லி ஆகிய ஆறு குழுக்களை சேர்ந்த 30 உறுப்பினர்கள் சேர்ந்து ஒரு அமைப்பை ஏற்படுத்தினர். இவர்களில் பெரும்பாலானவர்கள் தையல் தொழிலில் முன் அனுபவம் பெற்றுள்ளதால், தங்களின் சேமிப்புத் தொகை 70 ஆயிரம் ரூபாயினை மூலதனமாகக் கொண்டு பெண்களுக்கான உள்ளாடை, நைட்டி போன்ற வகைகளை தயாரித்து, அவற்றில் அழகிய முறையில் எம்ப்ராய்டரிங் செய்து விற்பனை செய்கின்றனர்.

தற்போது எஸ்.ஜி.எஸ்.ஒய். திட்டத்தின் கீழ் ரூ. 7,50 இலட்சம் மானியத்துடன் கூடிய கடன் பெற்று ரூ. 25.50 இலட்சம் மதிப்பீட்டில் தங்களின் தொழிலை விரிவடையச் செய்துள்ளனர். உள்கட்டமைப்பு நிதி உதவியுடன் ரூ. 5 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கட்டடத்தில் தங்களின் தையல் தொழிலகத்தையும், விற்பனை நிலையத்தையும் நடத்தி வருகிறார்கள்.

தரமாகவும், விலை குறைவாகவும், அழகிய தோற்றத்திலும் தயாரிக்கும் ஆடை வகைகளை பெண்கள் விரும்பி வாங்குகின்றனர். இந்த அமைப்பைச் சேர்ந்த 30 பெண்களும் தங்களுக்குள் பணிகளைப் பிரித்து செயல்பட்டு வருகின்றனர். மாநில மற்றும் மாவட்ட அளவில் நடைபெறும் விற்பனைக் கண்காட்சிகளில் கலந்து கொண்டு தங்களின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்கின்றனர். தங்களின் உற்பத்திப் பொருட்களை மாதம் ரூ. 2.50 இலட்சம் வரை விற்பனை செய்யும் இவர்கள் வங்கிக் கடன் தொகை திரும்பச் செலுத்தியது போக ஒவ்வொரு உறுப்பினரும் மாதம் ரூ. 1700/– முதல் ரூ. 2500/– வரை வருவாய் பெறுகின்றனர்.

அவர்களின் அபார வளர்ச்சி புதுக்கோட்டை மாவட்டத்தில் செயல்படும் இதர குழுக்களுக்கு முன் மாதிரியாக திகழ்வது மட்டுமல்லாமல் வெளிமாவட்ட கூட்டமைப்பு மற்றும் குழுக்களும் வருகை தந்து மேற்படி குழுவின் தொழில் நுணுக்கத்தையும் கற்றுச் செல்கின்றனர் என்பது குறிப்பிடத் தக்கது.

திருவள்ளூர் மாவட்டம்

# கூட்டமைப்புகளுக்கு பெருந்தொகை வழங்குதல்

திருவள்ளூர்மாவட்டம்,திருவொற்றியூர்பகுதியில்06.07.2011 அன்று மனுநீதிநாள் நிகழ்ச்சி நடைபெற்றது. மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு கைத்தறி துறை அமைச்சர் அவர்களும், திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கு கலந்து கொண்டு, அழிஞ்சிவாக்கம், கீழ்நல்லாத்தூர், ஜெகநாதபுரம் மற்றும் அஸ்வரேவந்தபுரம் ஆகிய நான்கு ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு ஊக்கத் தொகையாக தலா ரூ. 1 இலட்சம் வீதம் வழங்கினார்கள்.

மேலும் அங்கு அமைக்கப்பட்டிருந்த மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்த பொருட்களின் விற்பனைக் கண்காட்சியில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த கைவினைப் பொருட்களைப் பார்வையிட்டு, அப்பொருட்கள் குறித்த விபரங்களை கேட்டறிந்தனர்.

சிவகங்கை மாவட்டம்

# சிறப்பான வாழ்க்கை

லூர்து அன்னை மகளிர் சுய உதவிக் குழு, சிவகங்கை மாவட்டம், அரசனி முத்துப்பட்டி கிராமத்தில் 1990ஆம் ஆண்டு முதல் சிறப்பாகச் செயல்பட்டு வரும் குழுவாகும். IRCDS தொண்டு நிறுவனத்தின் உதவியுடன் அமைக்கப்பட்ட இக்குழுவில் சிறப்பான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இக்குழுவின் ஊக்குநர் திருமதி. மீனாள் அவர்கள் தங்கள் குழுவின் செயல்பாடுகள் குறித்து குறிப்பிடுகையில், 'எங்களது கிராமத்தில் முதன் முதலாக மகளிர் சுய உதவிக் குழுவை ஆரம்பிக்க வரும் போது நாங்கள் குழுவில் இணைய மறுத்தோம். அப்போது IRCDS தொண்டு நிறுவனத்தினர் எங்களிடம் மகளிர் திட்டத்தின் செயல்பாடுகளையும், மகளிர் முன்னேற்றத்திற்காக அது ஆற்றிவரும் பணிகளையும், சுய உதவிக் குழுவை துவக்குவதால் கிடைக்கும் பயன்களையும் எடுத்துக் கூறினார்கள். நாங்களும் லூர்து அன்னை மகளிர் சுய உதவிக் குழுவினைத் துவக்கி, தற்போது எங்கள் ஊராட்சியில் சிறந்த குழு என்ற பெயரினைப் பெற்று சிறப்பாக செயல்பட்டு வருகிறோம்.

வங்கியில் கடனாகப் பெற்ற ரூ. 4,60,000/– மற்றும் எங்கள் குழு உறுப்பினர்களின் பங்குத் தொகை ரூ. ஒரு இலட்சம் என மொத்தம் ரூ. 5,60,000/– முதல் போட்டு சமையல் பாத்திரங்கள் வாடகைக்குத் தரும் தொழிலை மேற்கொண்டு வருகிறோம். உள்ளூர் மற்றும் சுற்றுப்பகுதிகளில் உள்ள கிராமங்களுக்கு சமையல் பாத்திரங்களை வாடகைக்கு அளித்து வருகிறோம். இதன் மூலம் மாதந்தோறும் ரூ. 10 ஆயிரம் வரை வருவாய் பெற்று வருகிறோம்.

இரத்த தான முகாம், HIV / AIDS விழிப்புணர்வுப் பேரணி, தெருக்களை சுத்தம் செய்தல் போன்ற சமூகப் பணிகளிலும் ஈடுபட்டு பாராட்டுகளையும் சான்றிதழ்களையும் பெற்றுள்ளோம். எங்கள் குழுவின் சிறப்பான செயல்பாட்டிற்காக சிவகங்கை மாவட்டத்தின் சிறந்த சுய உதவிக் குழுக்களுக்கான மணிமேகலை விருதும் பெற்றுள்ளோம். வறுமையில் வாடி கஷ்டப்பட்ட காலம் மாறி, சுய தொழில் செய்து, வருமானம் பெற்று வளமுடன் வாழ்ந்து வருகிறோம். இதற்கு முழுமுதற் காரணம் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் தான்' என்று கூறுகிறார்.

தேனி மாவட்டம்

# இலட்சியம் நிச்சயம் வெல்லும்

தேனி மாவட்டம், கம்பம் ஒன்றியம், சுருளிப்பட்டியில் முல்லை மகளிர் சுய உதவிக் குழு செயல்பட்டு வருகிறது. இக்குழுவினர் வங்கியில் நேரடிக் கடனாகப் பெற்ற 60 ஆயிரம் ரூபாயினை முதலீடாகக் கொண்டு, ஜவுளி வியாபாரம் செய்யத் தொடங்கினர். முதலில் பெண்களுக்கான சேலைகளை மட்டுமே விற்பனை செய்து வந்தனர். பின்னர் சுடிதார், குழந்தைகளுக்கான உடைகள் மற்றும் ஆண்கள் அணியும் கைலிகள், சர்ட்டுகள், பேண்ட் பிட்டுகள் ஆகியவற்றை விற்பனை செய்ய ஆரம்பித்தனர்.

இதுபற்றி இக்குழுவின் ஊக்குநர் திருமதி பி. வீராங்கன்னி மற்றும் பிரதிநிதி ஆர். வசந்தி ஆகியோர் கூறும்போது, 'சுருளிப்பட்டி பஞ்சாயத்து மக்கள் தொகை அதிகம் உள்ள கிராமம். குழு ஏற்படுத்தி செயல்பட ஆரம்பித்தது முதல் ஏதேனும் ஒரு தொழில் ஆரம்பித்து செய்ய வேண்டும் என்பது எங்கள் இலட்சியமாக இருந்தது. ஊரில் மக்கள் தொகை அதிகம் என்பதும், போதுமான ஜவுளிக்கடைகள் ஊரில் இல்லை என்பதையும் அறிந்தோம்.

பின்னர் திட்டப்படியே ஜவுளி விற்பனை செய்வது என தீர்மானித்து ஜவுளி மொத்த விற்பனையாளர்களிடமிருந்து துணிகளைப் பெற்று விற்பனையை ஆரம்பித்தோம். முதலில் சரியான மொத்த விற்பனை மையத்தைக் கண்டறிவதில் சிரமம் ஏற்பட்டது. பின்னர் சரியான மையத்தில் வாங்கி விற்பனை செய்தபோது கணிசமாக இலாபத்தின் சதவீதம் உயர்ந்தது' என்கின்றனர்.

ஊக்குநர் திருமதி. பி. வீராங்கன்னியின் வீட்டின் முன்பகுதியை விற்பனை மையமாக வைத்து இக்குழுவினர் துணிகளை விற்பனை செய்து வருகின்றனர். இதுபற்றி குழுவினர் கூறும்போது 'தனியாகக் கடைபிடித்து விற்பனை செய்யுமளவிற்கு முதலீடு போதுமானதாக இல்லை என்பதால் வீட்டிலேயே கடை வைத்துள்ளோம். இதனால் பெண்கள் தனியாக துணிகள் எடுப்பதற்காக கடைவீதிக்கு செல்வதை விட ஏதோ பக்கத்து வீட்டிற்கு செல்வது போல வந்து துணிகளை வாங்கிச் செல்கின்றனர்' என்கின்றனர்.

மேலும் குழுவின் உறுப்பினர்கள் கிராமத்தில் உள்ள வீடுகள்தோறும் சென்றும் துணிகளை விற்பனை செய்து தவணை முறையில் பணத்தை பெற்று வருகின்றனர். இதனால் ஏராளமான வாடிக்கையாளர்கள் இவர்களுக்கு கிடைத்துள்ளனர்.

இக்குழுவினரின் மாத விற்பனை ரூபாய் 40 ஆயிரம் முதல் ரூபாய் 45 ஆயிரம் வரை உள்ளது. திருவிழாக் காலங்களில் ரூபாய்60 ஆயிரம் முதல் ரூபாய் 75 ஆயிரம் வரை உள்ளது. குழு உறுப்பினர்கள் தங்களின் குடும்பத் தேவைகளுக்காக இவர்களிடமே துணிகளை வாங்குவதால், சிக்கனத்திற்கு சிக்கனம் விற்பனைக்கு விற்பனையும் ஆகிறது.

வங்கியில் பெற்றக் கடனை முறையாக செலுத்துவதால் வங்கியாளர்களிடம் இந்தக் குழுவிற்கு நல்ல மதிப்பும் உள்ளது. சுருளிப்பட்டி ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் இக்குழு உறுப்பினராக இணைந்துள்ளது.

'எதிர்காலத்தில் அனைத்து தரப்பினருக்கமான ஆயத்த ஆடைகளை நாங்கள் தயாரித்து விற்பனை செய்ய வேண்டும். இதன் மூலம் 50 நபர்களுக்காவது வேலை வாய்ப்பை ஏற்படுத்தி தர வேண்டும். இதுவே எங்களின் எதிர்கால இலட்சியம்' என்று சொல்கிறார்கள் முல்லை மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள்.

திருநெல்வேலி மாவட்டம்

## கற்றாழை தரும் வற்றாத வாழ்வு

காட்டு நிலத்தில் வளருகின்ற கற்றாழை இன்று களக்காடு, சேரன்மகாதேவி பகுதியிலுள்ள கிராமப் பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதில் முக்கிய பங்கினை ஏற்றுள்ளது.

ஆம், இருபது ஆண்டுகளுக்கு முன்பிருந்து இந்தப் பகுதி வறண்ட பிரதேசமாகவே இருந்து வருகிறது. கற்றாழை இந்த வறண்ட பூமியில் தானாக வளரும் தாவரம். யாருக்கும் பயன்படாமல் இருந்த இந்த கற்றாழை இன்று இப்பகுதி பெண்களுக்கு வாழ்வாதாரம் தரும் ஒன்றாக மாறியுள்ளது.

ஆரம்ப காலத்தில் கற்றாழை நாரில் இருந்து கயிறு மட்டுமே திரித்துக் கொண்டிருந்தனர். காஸ்ட் நிறுவனம் மூலம் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு அளித்த திறன் மேம்பாட்டு பயிற்சி காரணமாக இன்று இராமகிருஷ்ணாபுரத்தில் செயல்பட்டு வரும் ரோஜா மகளிர் சுய உதவிக் குழுவினர் இந்தக் கற்றாழை நாரில் இருந்து மதிப்புமிக்க கைவினைப் பொருட்களை தயாரிக்கக் கற்றுக் கொண்டனர்.

இந்தக் குழுவின் உறுப்பினர்கள் கற்றாழை நாரிலிருந்து அழுக்குத் தேய்க்கும் பிரஷில் முதற்கொண்டு அலங்காரப் பொருட்கள் வரை அனைத்தையுமே தயாரித்து வருகின்றனர் என்பது மிகவும் பாராட்டுதலுக்குரியது. இதன் மூலம் இவர்கள் தினசரி வருமானமாக ரூ. 100/– முதல் ரூ. 150/– வரை பெற்று வருகின்றனர். மேலும் இவர்களுக்கு மத்திய அரசின் அடையாள அட்டை பெற்றுத் தரப்பட்டு, கைவினைக் கலைஞர்களுக்கான காப்பீட்டுத் திட்டத்தின் பயனையும் பெற்று வருகின்றனர்.

இந்த மகளிர் குழு உறுப்பினர்கள் தயாரிக்கும் கைவினைப் பொருட்கள் கணக்கற்றவை. பன்னாட்டுச் சந்தையில் தமக்கென தனியிடத்தைப் பெற்று வருடந்தோறும் இலட்சக்கணக்கான ரூபாய் அளவில் சந்தைப்படுத்தப்பட்டு வருகின்றன. மகளிர் திட்டத்தால் அங்கீகரிக்கப்பட்ட தொண்டு நிறுவனமான காஸ்ட் நிறுவனம் மூலம் இப்பகுமி கிராமப்புற பெண்கள் நீடித்த நிலைத்த வாழ்வாதார மேம்பாட்டினை அடைந்துள்ளனர் என்பதை யாரும் மறுக்க முடியாது.

தருமபுரி மாவட்டம்

## இலவசமாக மனுக்கள் எழுதி தருதல்

தருமபுரி மாவட்டத்தில் பிரதி வாரம் திங்கட்கிழமைதோறும் மாவட்ட ஆட்சியர் அவர்களின் மக்கள் குறைதீர்க்கும் முகாமில் மனுக்கள் பெறப்பட்டு வருகிறது. இந்த மனுக்கள் வெளிநபர்களால் ரூ. 25, ரூ. 50 என பணம் பெற்றுக் கொண்டு சம்பந்தப்பட்டவர்களுக்கு எழுதித் தரப்பட்டு வந்தது. தற்போது மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில் திட்ட அலுவலர், மகளிர் திட்டம் அவர்களின் நேரடி பார்வையில் மகளிர் திட்டத்தின் மூலம் தொண்டு நிறுவனத்தில் பணியாற்றக் கூடிய பணியாளர்களைக் கொண்டு இலவசமாக எழுதித் தரப்படுகிறது.

இதனால் மனுக்கள் கொடுக்க வருகின்ற ஏழைகள் மற்றும் எழுத்தறிவு இல்லாத மக்கள் பெரும் மகிழ்ச்சி அடைந்துள்ளார்கள். இதனால் பொதுமக்கள் மத்தியில் மாவட்ட நிர்வாகத்திற்கு நல்ல வரவேற்பும், நன்மதிப்பும் கிடைத்துள்ளது.

# ஊராட்சி அளவிலான சுய உதவிக் குழுக் கூட்டமைப்பு

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலின் கீழ் மாநிலம் முழுவதும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டு, அவைகளின் வாயிலாக ஏழை எளிய மகளிரின் வாழ்வில் பொருளாதார வளர்ச்சி ஏற்படுத்தப்பட்டு வருகிறது. சுய உதவிக் குழு இயக்கம் பெற்ற வெற்றியின் அடிப்படையில் இவ்வியக்கத்தினை மேலும் வலுப்படுத்தும் வகையில் குழுக்களை ஒன்றிணைத்து கூட்டமைப்புகள் உருவாக்கப்படுகின்றன. கூட்டமைப்புகள் குறித்த பல்வேறு செய்திகளை அனைவரும் அறிந்திடும் வண்ணம் கூட்டமைப்பு குறித்த தொடர் இப்பகுதியில் இடம் பெறுகிறது.

## ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள்

ஊராட்சி அளவிலான குழுக்கள் அனைத்தையும் ஒன்றிணைத்து, குழு உறுப்பினர்கள் சமூக, பொருளாதார வாழ்வில் சுய சார்பு பெற்று தங்களை தாங்களே நிர்வகித்து செயல்படுவதற்கு ஏற்ற வகையில் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் ஜுலை 2002ல் பஞ்சாயத்து அளவிலான கூட்டமைப்புகள் உருவாகிட வழிகாட்டியது.

2002ம் ஆண்டு முதல் தமிழ்நாட்டில் உள்ள 12,618 ஊராட்சிகளில் கூட்டமைப்புகள் உருவாக்கப்பட்டு, பொறுப்புகளை நிர்வாகிகள் சரிவர நிறைவேற்றிட நிர்வாகிகளுக்கு பயிற்சிகளும் தரப்பட்டன. ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் முறையாக செயல்பட்டிட, அரசு சார்பில் கட்டப்பட்டுள்ள சுய உதவிக் குழு கட்டடங்கள் கூட்டமைப்பிடம் ஒப்படைக்கப்பட்டன.

கூட்டமைப்புகள் நிர்வாக ரீதியாகச் செயல்பட்டிடவும், தேவையான தளவாடச் சாமான்கள் வாங்கிடவும் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் அரசு சார்பில் கூட்டமைப்புகளுக்கு ரூ. 10,000/– தொடக்க நிதி அல்லது ஆதார நிதி வழங்கிட ஏற்பாடு செய்ததுடன், கூட்டமைப்புகளுக்கு நிர்வாக ரீதியாக அங்கீகாரம் அளித்திடும் பொருட்டு குழுக்களின் தர மதிப்பீட்டுக் குழுவில் அதன் பிரதிநிதித்துவம் இருக்கும் வகையில் வழி வகை செய்யப்பட்டது.

கூட்டமைப்பு நேரடியாகவே தன் ஊராட்சிக்குட்பட்ட எல்லைப்பகுதியில் புதிய குழுக்களை அமைத்திடவும், அதனை கண்காணித்திடவும் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. குழு அமைத்தல் மற்றும் கண்காணித்தலுக்கான தொகையினையும் கூட்டமைப்பு அந்த மாவட்ட மகளிர் திட்ட அலுவலகத்தில் நேரடியாக பெற்றுக் கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

கூட்டமைப்பினை சமுதாயத்தில் அங்கீகரிக்கப்பட்ட அமைப்பாக உருவாக்கும் விதத்தில், தொண்டு நிறுவனங்களால் உருவாக்கப்பட்டு, கண்காணிக்கப்பட்டு, பயிற்றுவிக்கப்பட்ட குழுக்களின் நிலையைக் கண்டறிந்து, அதற்கான தொகையினை தொண்டு நிறுவனங்கள் பெற கூட்டமைப்புகள் சான்று அளிக்கும் தகுதியினை தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் வழங்கியது.

தொண்டு நிறுவனங்கள் மற்றும் கூட்டமைப்புகளால் உருவாக்கப்பட்ட குழுக்கள் அனைத்தும் முறையாகத் தகுதி பெற்று, அப்பகுதி ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் உறுதியாக இணையப்பட வேண்டும் என்கிற ஒப்பந்தம் அங்கீகரிக்கப்பட்ட தொண்டு நிறுவனங்களுக்கும், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்திற்கும் ஏற்படுத்தப்பட்டது.

ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் அனைத்துக் குழுக்களின் பிரதிநிதித்துவம் கொண்ட அமைப்பாகவும், ஜனநாயகத் தன்மையுடைய, தற்சார்புடைய, குழுக்களுக்குத் துணை புரியும் அமைப்பாகவும், அனைவரது பங்கேற்பையும் உறுதி செய்யும் அமைப்பாகவும், நிர்வாகிகளை தொடர்ந்து சுழற்சி முறையில் மாற்றுகின்ற அமைப்பாகவும் செயல்படும் வகையில் மறுசீரமைக்கப்பட்டு உள்ளன.

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் கருத்துருவின் அடிப்படையில் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை மறுசீரமைக்க அரசு ஆணை வெளியிடப்பட்டது. அதன்படி ஊராட்சி அளவிலான சுய உதவிக் குழுக்களின் கூட்டமைப்பு குடியிருப்பு அளவிலான கூட்டமைப்பு மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு என இரண்டு நிலைகளைக் கொண்டது, மேற்கண்ட இரு அமைப்புகளுக்கும் நெறிமுறைகளை வகுத்து, ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மறுசீரமைக்கப்பட்டு வருகின்றன.

(தொடரும்)

# உழைப்பின் வெற்றி

காஞ்சிபுரம் மாவட்டம் புனித தோமையர் மலை ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள முடிச்சூர் ஊராட்சியில் செயல்பட்டு வரும் முடிச்சூர் ஊராட்சி அளவிலான குழுக் கூட்டமைப்பு மறுசீரமைக்கப்பட்டு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு முன்மாதிரிக் கூட்டமைப்பாக செயல்பட்டு வருகிறது. மகளிர் திட்ட தொண்டு நிறுவனமாக அங்கீகரிக்கப்பட்டதால், கூட்டமைப்பின் மூலம் புதிய மகளிர் சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டு, அக்குழுக்களின் நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்களுக்கு முறையாக ஊக்குநர் பிரதிநிதி பயிற்சி, குழு உறுப்பினர்கள் பயிற்சி, நிதி மேலாண்மை பயிற்சி மற்றும் நிர்வாகப் பயிற்சி போன்றவை அளிக்கப்பட்டு, குறுங்கடன் திட்டங்களில் எந்த ஒரு குழுவும் பாதிக்காமல் இருப்பதற்காக விழிப்புணர்வு ஏற்படுத்தி தொடர்ச்சியாக கண்காணிக்கப்படுகிறது.

இக்கூட்டமைப்பில் உறுப்பினர் குழுக்களாக உள்ள 116 குழுக்களில் 76 குழுக்கள் சுழல் நிதி பெற்றும், 2 குழுக்கள் பொருளாதாரக் கடன் பெற்றும் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. முடிச்சூர் பகுதியில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலை சரி செய்யும் நோக்கில் ஒரு குழுவின் உறுப்பினர்கள் ஒரு வாரம் என்ற முறையில் முடிச்சூர் பேருந்து நிலையத்தில் போக்குவரத்து நெரிசலை சரி செய்து வருகின்றனர். இதனால் விபத்துகள் பெருமளவு தவிர்க்கப்படுகிறது. சுற்றுச்சூழலை பாதுகாக்க தொடர்ச்சியாக கிராமப் பஞ்சாயத்து நிர்வாகத்துடன் இணைந்த செயல்பட்டு வருகின்றனர்.

இக்கூட்டமைப்பு தாம்பரம் கிளை, இந்தியன் வங்கியில் பெருங்கடன் தொகையாக ரூ. 23.50 இலட்சம் பெற்று முறையாகத் திரும்பச் செலுத்தியுள்ளனர். இரண்டாவது முறையாக ரூ. 25 இலட்சத்தை இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் பெற்றுள்ளனர்.

திருச்சி மாவட்டம்

# ஸ்ரீ அம்மன் மகளிர் சுய உதவிக் குழுவினர் வாழ்வில் மகிழ்ச்சி!

ஏழ்மையின் பிடியில் சிக்கி மிகவும் சிரமத்துடன் வாழ்ந்து வந்தவர்கள், சுய உதவிக் குழுவால் இன்று வளமான வாழ்வு பெற்று மகிழ்வுடன் வாழ்ந்து வருகிறார்கள். அவர்கள் வெற்றி பெற்றது எப்படி என்பதை காண்போம்.

திருச்சி மாவட்டம், முசிறி ஒன்றியம், செவந்தலிங்கபுரம் பஞ்சாயத்தில் உள்ளது உமையாள்புரம் கிராமம். விவசாயப் பகுதி என்பதால் விவசாயக் கூலித் தொழிலாளர்கள் நிறைந்திருக்கும் கிராமம். வேறு தொழில் வாய்ப்புகள் ஏதும் இல்லாத மிகவும் பின்தங்கிய பகுதி. நிரந்தரமற்ற வேலைவாய்ப்பால் என்றும் ஏழ்மை நிறைந்திருக்கும் வாழ்க்கை நிலை.

இந்தச் சூழ்நிலையில் மகளிர் திட்டத்தின் வழி காட்டுதலின்படி சேவை தொண்டு நிறுவனம் மூலம் ஸ்ரீ அம்மன் மகளிர் சுய உதவிக் குழு துவக்கப்பட்டது. இக்குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் ஏழை எளிய குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள். இவர்களுக்குத் தேவையான பயிற்சிகளை மகளிர் திட்டமும் தொண்டு நிறுவனமும் வழங்கின. சுழல் நிதியும், பொருளாதாரக் கடனாக ரூ. 5 இலட்சமும் பெற்றுத் தரப்பட்டது.

உமையாள்புரம் கிராமத்தில் ஏராளமாக கோரை விளைவதாலும், கோரைப் பாய்களுக்குத் தேவையான மூலப் பொருட்களான கோரை, நூல், சாயப்பவுடர் போன்றவை உள்ளூரிலேயே கிடைப்பதாலும் கோரைப் பாய்களை உற்பத்தி செய்யலாம் என ஸ்ரீ அம்மன் மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் முடிவு செய்தனர்.

மகளிர் திட்டம் மற்றும் சேவை தொண்டு நிறுவனம் ஆகியவற்றின் வழிகாட்டுதலின்படி, பொருளாதாரக் கடனாகப் பெற்றத் தொகையினை மூலதனமாகக் கொண்டு கோரை பாய் பொருட்களை தயாரித்து பல்வேறு பகுதிகளிலும் விற்பனை செய்து வருகின்றனர்.

தரமானதாகவும் விலை குறைவாகவும் இருப்பதால் இக்குழுவினர் தயாரிக்கும் கோரைப் பாய்கள் மக்களிடையே மிகுந்த வரவேற்பினைப் பெற்றுள்ளன. மேலும் வெளிமாநிலங்களுக்கும் கோரைப்பாய்களை விற்பனைக்கு அனுப்புகின்றனர்.

கிடைக்கும் வருவாயில் வங்கிக் கடன் தவணை செலுத்தியது போக மீதமுள்ளத் தொகையினை குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் பிரித்து எடுத்துக் கொள்கின்றனர். மேலும் குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் இணைந்து சமுதாய நலப் பணிகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

இத்தகைய வெற்றிக்கு காரணம் மகளிர் திட்டம் மற்றும் சேவை தொண்டு நிறுவனம் ஆகியவற்றின் வழிகாட்டுதலும் உதவியுமே என்கின்றனர் ஸ்ரீ அம்மன் மகளிர் சுய உதவிக் குழுவினர்.

# சாதனைகள் படைத்திடுவோம்

**மகளிர் சுய உதவிக் குழுக்கள் வாரச் சந்தையில் வரி வசூல் செய்யும் உரிமையை பெற்றிருப்பதன் மூலம் சமூக பொருளாதார அரசியல் தற்சார்பு அடைவதற்கு ஒரு முன்னுதாரணமாய் விளங்குகின்றன என்றால் அது மிகையல்ல.**

விழுப்புரம் மாவட்டத்தில் மகளிர் திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் பொன் விழா கிராம சுய வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் ஊரக பகுதிகளிலுள்ள வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் மக்களின் சமூக பொருளாதார மேம்பாடு அடைவதில் உறுதி செய்வதில் முக்கிய பங்கு வகித்து வருகிறது.

இம்மாவட்டத்தில் செயல்பட்டு வரும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களுக்கு அடிப்படை பயிற்சிகள் மற்றும் வாழ்வாதார மேம்பாட்டிற்கு வழிவகுக்கும் தொழில் முனைவோர் பயிற்சிகளும் வழங்கப்படுகிறது.

மகளிர் சுய உதவிக் குழுக்களை பொருளாதார தற்சார்பு அடையச் செய்யும் நோக்கில் அவைகளுக்கு சுழல் நிதி மற்றும் பொருளாதாரக் கடன்கள் வழங்கப்படுகின்றன. இவைகளைப் பெறும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் தத்தம் வாழ்வாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வண்ணம் மண் பொம்மைகள், மென் பொம்மைகள், தோல் பொருட்கள், காய்கனி சாகுபடி, மலர் சாகுபடி மற்றும் பால் உற்பத்தி உள்ளிட்ட பல்வேறு தொழில்களை மேற்கொண்டு தன்னம்பிக்கையும் முன்னேற்றமும் வெற்றியும் கண்டு வருகின்றனர்.

விழுப்புரம் மாவட்டத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் முன்னேற்றம் கண்டு வருவதற்கான ஓர் முத்தாய்ப்பான முன்னுதாரணமாய் முகையூர் ஊராட்சி ஒன்றியம் கண்டாச்சிபுரம் ஊராட்சியில் செயல்பட்டு வரும் கண்டாச்சிபுரம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பினை குறிப்பிடலாம்.

கண்டாச்சிபுரம் ஊராட்சிக்கும், அதனைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கும் பயனளிக்கும் வகையில் வாரந்தோறும் வெள்ளிக்கிழமையன்று நடைபெறும் சந்தையில் உணவு பொருட்கள், துணி வகைகள், வேளாண் விளை பொருட்கள் ஆகியவற்றுடன் ஆடு, மாடு, கோழி உள்ளிட்ட கால்நடை வகைகளும் விற்பனைக்கு வருகின்றன. சுமார் ரூ. 25 இலட்சத்திற்கும் அதிகமான அளவில் வர்த்தகம் நடைபெறும் இவ்வாரச் சந்தையில் வரி வசூல் செய்யும் உரிமையை கண்டாச்சிபுரம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் உறுப்பினராக உள்ள தீபம், பி.டி.உஷா, ஸ்ரீ அம்மன் மற்றும் தாமரை ஆகிய மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு குத்தகை முறையில் வாரச் சந்தையில் வரி வசூலிக்கும் உரிமை வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி குழுக்கள் வாரச் சந்தையில் விற்பனைக்கு வரும் பல்வேறு பொருட்களுக்கும் வரி வசூல் செய்கின்றனர். சந்தை நடைபெறும் நாள் ஒன்றிற்கு ரூ. 7,000/– முதல் ரூ. 8,000/–வரை வரி வசூல் செய்யப்படுகிறது. இதன் மூலமாக ஆண்டிற்கு ரூ. 5 இலட்சம் வரை வரி வசூலிக்கப்படுகிறது. ஏலத்தொகை ரூ. 2.70 இலட்சம் நீங்கலாக ரூ. 2.30 இலட்சம் ஆண்டொன்றிற்கு நிகர வருமானமாக கிடைக்கிறது.

மேலும் சந்தையில் கால்நடைகள் இடும் சாணம் மற்றும் கடைகளில் இருந்து கிடைக்கும் குப்பைகளிலிருந்து மண்புழு உரம் தயாரிக்கப்படுகிறது. இதன் மூலம் ஆண்டிற்கு ரூ. 50 ஆயிரம் வரை வருவாய் கிடைக்கிறது.

கிடைக்கும் வருவாயில் கடன் தவணை செலுத்தியது போக மீதமுள்ள தொகையினை குழுக்கள் தங்களுக்குள் பிரித்துக் கொள்கின்றனர். மகளிர் சுய உதவிக் குழுக்கள் வாரச் சந்தையில் வரி வசூல் செய்யும் உரிமையை பெற்றிருப்பதன் மூலம் சமூக பொருளாதார அரசியல் தற்சார்பு அடைவதற்கு ஒரு முன்னுதாரணமாய் விளங்குகின்றன என்றால் அது மிகையல்ல.

**கண்டாச்சிபுரம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் உறுப்பினராக உள்ள தீபம், பி.டி.உஷா, ஸ்ரீ அம்மன் மற்றும் தாமரை ஆகிய மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு குத்தகை முறையில் வாரச் சந்தையில் வரி வசூலிக்கும் உரிமை வழங்கப்பட்டுள்ளது.**

அரியலூர் மாவட்டம்

## மகளிர் திட்டத்திற்கு நன்றி

அரியலூர் மாவட்டம், கீழமாத்தூர், கோவிந்தராசபட்டிணம் கிராமத்தில் வசிப்பவர் திருமதி. லெட்சுமி. பள்ளி மேல் நிலைப் படிப்பு படித்த இவர், கணவனால் கைவிடப்பட்ட நிலையில் தனது அன்றாட தேவைகளைக் கூட நிறைவேற்ற முடியாத வறுமை நிலையில் வாழ்ந்து வந்தார். அச்சமயத்தில் அரியலூர் மாவட்ட மகளிர் திட்டத்தின் மூலம் இலவச கணிப்பொறி பயிற்சி வழங்கப்படுவதை அறிந்து அதற்கு விண்ணப்பித்தார். நேர்காணலுக்குப்பின் அவருக்கு இலவசமாக கணிப்பொறி பயிற்சி அளிக்கப்பட்டதுடன், ஊக்கத் தொகையும் வழங்கப்பட்டது.

பயிற்சிக்குப் பின்னர் திருமதி லெட்சுமிக்கு, அவரின் வீட்டிற்கு அருகிலேயே மாதம் ரூ. 3,000/– ஊதியத்தில் கணினி ஆசிரியைப் பணியும் பெற்றுத் தரப்பட்டது. தனது வாழ்க்கையை வளமாக்கிய மகளிர் திட்டத்திற்கு தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறார் திருமதி. இலட்சுமி.

அரியலூர் மாவட்டம், கல்லக்குடித் தெருவில் வசித்து வருபவர் செல்வி. ரம்யா. இவர் பள்ளி மேல்நிலை வகுப்பு படிக்கும் போது இவரின் தந்தையார் திரு. நடராஜன் திடீரென்று மரணமடைந்து விட்டார். இதனால் இவரின் குடும்பம் வறுமையில் சிக்கித் தவித்தது. இவரின் மேல்படிப்பும் தடைபட்டது. இந்நிலையில் அரியலூர் மாவட்ட மகளிர் திட்டம் மூலம் இலவச கணினிப் பயிற்சி அளிக்கப்படுவதை செய்தித்தாளின் மூலம் அறிந்து கொண்ட செல்வி. ரம்யா, அதற்கு விண்ணப்பித்தார். பயிற்சிக்கான நேர்காணலில் தேர்வு பெற்ற ரம்யாவுக்கு இலவச கணினிப் பயிற்சியுடன் ஊக்கத் தொகையும் வழங்கியதுடன், பயிற்சிக்குப் பின்னர் வேலைவாய்ப்பும் பெற்றுத் தரப்பட்டுள்ளது.

தற்போது செல்வி. ரம்யா தனது குடும்பத்தினை வறுமையின் பிடியில் இருந்து மீட்டுள்ளதுடன், தொலைதூரக் கல்வி வகுப்பிலும் சேர்ந்து மேற்படிப்பு படித்து வருகிறார். ஏழ்மையின் பிடியில் இருந்து தனது குடும்பத்தைக் காத்து, தனக்கு ஒளிமயமான எதிர்காலத்தை வழங்கிய மகளிர் திட்டத்திற்கும் அதன் அலுவலர்களுக்கும் தான் என்றும் கடமைப்பட்டிருப்பதாக கூறுகிறார் செல்வி ரம்யா.

நாகை மாவட்டம்

## வெற்றிக்கு எடுத்துக்காட்டு

நாகப்பட்டினம் மாவட்டம், கொள்ளிடம், ஆரப்பள்ளம் பஞ்சாயத்தில் வசிக்கும் வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள 12 பெண்களை தேர்வு செய்து, பாரிஜாதம் மகளிர் சுய உதவிக் குழு உருவாக்கப்பட்டது. இக்குழுவின் உறுப்பினர்கள் புதுப்பட்டிணம் பாரத ஸ்டேட் வங்கியில் சேமிப்புக் கணக்குத் துவங்கி சேமித்து வந்தனர். குழு துவங்கி 6 மாதம் முடிவுற்றப் பின்னர் மகளிர் திட்டத்தின் மூலம் சுழல் நிதி பெற்றனர். அந்தத் தொகையினை மூலதனமாகக் கொண்டு துணிகளை வாங்கி விற்பனை செய்து வருவாய் ஈட்டினர்.

பின்னர் கூட்டமைப்பின் மூலம் மானியத்துடன் கூடிய தொழிற்கடனாகப் பெற்ற மூன்று இலட்சம் ரூபாயில், 2 தையல் இயந்திரங்களை வாங்கியதுடன், துணிக்கடையும் வைத்துள்ளனர். தற்போது துணிக்கடையில் கிடைக்கும் வருமானத்தில் வங்கிக் கடன் தொகை செலுத்தியது போக மீதமுள்ள தொகையை தங்களுக்குள் பிரித்துக் கொள்கின்றனர். வாழ்க்கையில் வெற்றி பெற அயராது உழைப்பதுடன், சிறுசேமிப்பும் அவசியம் என்பதை உணர்ந்துள்ள பாரிஜாதம் மகளிர் சுய உதவிக் குழுவினர் இன்று பெண்களின் வெற்றிக்கு எடுத்துக்காட்டாக உள்ளனர்.

# குன்னத்தூர் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் சாதனை

திருவண்ணாமலை மாவட்டம், மேற்கு ஆரணி வட்டத்தைச் சேர்ந்த குன்னத்தூர் கிராமத்தில் செயல்பட்டு வருவது குன்னத்தூர் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு. ஆரம்பத்தில் நான்கு குழுக்கள் மட்டுமே இருந்த இக்கூட்டமைப்பில் தற்போது 42 குழுக்கள் உறுப்பினராக உள்ளன. மறுசீரமைக்கப்பட்ட பின்னர் இக்கூட்டமைப்பின் கீழ் மூன்று குடியிருப்பு மன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

திறமை வாய்ந்த நிர்வாகிகளால் நிர்வகிக்கப்பட்டு வரும் குன்னத்தூர் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் உறுப்பினர்களாக உள்ள சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த அனைத்துப் பெண்களுக்கும் சுய உதவிக் குழு பயிற்சி, நிர்வாகப் பயிற்சி மற்றும் தொழில் முனைவோர் பயிற்சி, பட்டு நெசவு, தையல் தொழில், மெழுகுவர்த்தி தயாரித்தல் போன்ற தொழிற்பயிற்சிகளும் வழங்கப்பட்டுள்ளன.

தொழிற்பயிற்சி பெற்றவர்களுக்கு வங்கிக் கடன் பெற்றுத் தரப்பட்டுள்ளது. பட்டு நெசவு, செங்கல் சூளை, பால் ஸ்டோர், விறகு கடை, மளிகைக் கடை, சிற்றுண்டி சாலை, உணவகம், தேநீர் கடை, பேன்ஸி ஸ்டோர் மற்றும் பாய் நெய்தல் போன்ற பல தொழில்களில் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் ஈடுபட்டு வருவாய் பெற்று பொருளாதார வளர்ச்சி அடைந்து வருகின்றனர்.

மரக்கன்றுகளை நடுதல், பள்ளிக்கு செல்லாமல் இடைநின்ற மாணவர்களை மீண்டும் பள்ளிக்கு செல்ல வழி செய்தல், சுகாதார வளாகத்தை பராமரித்தல், முதியோர் உதவித் தொகை பெற்றுத் தருதல், பெண்களுக்கு எதிரான செயல்களை தடுத்தல், விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சிகளை நடத்துதல், மதுக்கடையை ஊருக்கு வெளியே நடத்த முயற்சி மேற்கொண்டது போன்ற சமூக நலச் செயல்களிலும் குன்னத்தூர் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு ஈடுபட்டு வருகிறது.

மேலும் இக்கூட்டமைப்பின் உறுப்பினராக உள்ள பெண்கள் உள்ளாட்சித் தேர்தலில் பங்கு கொண்டு, ஊராட்சி மன்ற தலைவர், வார்டு உறுப்பினர் என பதவி வகித்து வருகின்றனர்.

குன்னத்தூர் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு பெற்றுள்ள வெற்றிக்குக் காரணம் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் அதிகாரிகளின் சீரிய வழிகாட்டுதலும், திருவண்ணாமலை மாவட்ட மகளிர் திட்ட அலுவலர் மற்றும் உதவித் திட்ட அலுவலர்களின் ஊக்கமும், கூட்டமைப்பின் உறுப்பினர் குழுக்கள், குழுக்களின் ஊக்குநர் பிரதிநிதிகள், கூட்டமைப்பு நிர்வாகிகள், வங்கி அலுவலர்களது உதவிகள், வட்டார வளர்ச்சி அலுவலர், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் ஆகியோரின் பங்களிப்பும்தான் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

இக்கூட்டமைப்பு மூலம் மேற்கொள்ளப்படும் பட்டு நெசவு, பாய் நெய்தல், பால் ஸ்டோர் மற்றும் செங்கல் சூளை ஆகியவற்றின் செயல்பாடுகளை காண பட்டறிவுப் பயணமாக பல்வேறு கூட்டமைப்பினர் அடிக்கடி வருகை தருகின்றனர்.

# உடல் நலம் காப்போம்

'உணவே மருந்து, மருந்தே உணவு' என்று நம் முன்னோர்கள் வாழ்ந்த வந்தனர். அவர்களின் உணவு முறையானது பெரும்பாலும் இயற்கையைச் சார்ந்தே இருந்ததால் எவ்வகையான நோயின் தாக்குதலுக்கும் ஆளாகாமல் நலமாய் வாழ்ந்துள்ளனர்.

ஆனால் இன்றோ பல்வேறு நோய்களுக்கும் ஆளாகி மருந்துவமனையை நாடிச் செல்பவர்கள் ஏராளம். 10 நபரில் 4 பேர் நீரிழிவு நோயின் தாக்குதலுக்கும், மூன்று பேர் இருதய நோய்க்கும், மீதமுள்ளவர்கள் இன்னபிற நோய்களுக்கும் ஆளாகி உள்ளதாக புள்ளி விபரங்கள் கூறுகின்றன.

50 வயதுக்கு மேற்பட்டவர்களில் எவ்வித நோயின் தாக்குதலுக்கும் ஆளாகாமல் உள்ளவர்களை காண்பது இன்று அரிதாகி வருகிறது. அறுவை சிகிச்சை என்பது இன்று சாதாரண நிகழ்வாக மாறி வருகிறது. இன்று நாம் உண்ணும் உணவுகளே நமது உடல் நலத்திற்கு எதிராக உள்ளன.

நம் முன்னோர்களின் உணவில் பெரும்பாலும் காய்கனிகளும், இயற்கை உரங்களால் விளைவிக்கப்பட்ட தானியங்களும் இடம் பெற்றிருந்தன. கடின உழைப்பும், கலப்படமற்ற உணவும் அவர்களின் நலவாழ்விற்கு உறுதுணையாக இருந்தன. நாம் உண்ணும் காய்களில் இருக்கும் பல்வேறு சத்துக்கள் நம்மை தாக்கும் நோய்களிலிருந்து நம்மை காத்து நமது உடல் நலத்தை மேம்படுத்துகின்றன. அத்தகைய காய்களை உண்ணுவதால் நீங்கும் நோய்களையும் காணலாம்.

### வாழைப் பூ

இரும்புச் சத்து, போலிக் அமிலம், வைட்டமின் ஏ, பி, சி சத்துக்கள் நிறைந்துள்ளன. இரத்தச் சோகை வராமல் தடுத்து, உடலுக்கு புத்துணர்வைத் தருகிறது.

**பாகற்காய்**

வைட்டமின் ஏ, பி, சி, பாஸ்பரஸ், இரும்புச் சத்து, கால்சியம் சத்துக்கள் நிறைந்துள்ளன. பசியைத் தூண்டும், சர்க்கரை நோயின் கடுமையை குறைக்கும்.

**சேப்பங்கிழங்கு**

கால்சியம், பாஸ்பரஸ் நிறைந்துள்ள இதை உண்பதால், பற்களும் எலும்புகளும் உறுதியாகும்.

**பீட்ரூட் :** கால்சியம், சோடியம், பொட்டாசியம் சத்துக்கள் நிறைந்துள்ளதால், மலச்சிக்கலைப் போக்கும், ரத்த சோகையை சரிப்படுத்தும்.

**வெண்டைக்காய்**

போலிக் அமிலம், கால்சியம், பாஸ்பரஸ் நிறைந்துள்ளன. நினைவாற்றலைப் பெருகும். பசியைத் தூண்டும். மலச்சிக்கலைக் நீக்கும்.

**கோவைக்காய்**

வைட்டமின் ஏ, கால்சியம், போலிக் அமிலம், பாஸ்பரஸ், இரும்புச் சத்துக்கள் நிறைந்துள்ளன. வயிற்றுப்புண், வாய்ப்புண், மூல நோய் போன்றவை நீங்கும்.

**முருங்கைக் காய்**

வைட்டமின் ஏ, பி, சி, பாஸ்பரஸ், இரும்புச் சத்து நிறைந்துள்ளன. பெண்களுக்கு மாத விலக்கின் போது உண்டாகும் அதிக உதிரப் போக்கைத் தடுக்கும்.

**சுண்டைக்காய்**

புரதம், கால்சியம், இரும்புச் சத்து கணிசமாக உள்ளது. வயிற்றில் உள்ளப் புழுக்கள் கொல்லப்படும்.

**சுரைக்காய்**

புரதம், கால்சியம், இரும்புச் சத்து, பாஸ்பரஸ், வைட்டமின் பி ஆகிய சத்துக்கள் அடங்கியுள்ளன. உடல் சோர்வை நீக்கி உடலுக்கு புத்துணர்வைக் கொடுக்கும்.

**குடை மிளகாய்**

வைட்டமின் ஏ, பி, சி, கால்சியம், பாஸ்பரஸ், இரும்புச் சத்து ஆகியன கணிசமாக உள்ளன. அஜீரணக் கோளாறை நீக்கி செரிமான சக்தியைத் தூண்டும்.

**சௌசௌ :** கால்சியம், வைட்டமின் சி சத்துக்கள் உள்ளன. எலும்பு, பற்கள் போன்றவைகளுக்கு உறுதி உள்ளன.

**அவரைக்காய்**

புரதம், நார்ச்சத்து மிகுந்துள்ளால் உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்து உடலை பலப்படுத்துகிறது. மலச்சிக்கலைப் போக்குகிறது.

**காரட் :** உடலுக்கு உறுதியைக் கொடுக்கும். இரத்தத்தை சுத்தப்படுத்தும்.

**கொத்தவரங்காய்**

இரும்புச் சத்து, கால்சியம், பாஸ்பரஸ், வைட்டமின் ஏ, பி, சி நிறைந்துள்ளன. நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும். இரத்தத்தை சுத்தப்படுத்தும்.

பனைஓலை பொருட்கள்

மல்லிகை மகளிர் சுய உதவிக் குழு
திருவள்ளூர் மாவட்டம்.
செல்பேசி 97867 33184

அலங்கார பொம்மைகள்

தென்றல் மகளிர் சுய உதவிக் குழு
கோவை மாவட்டம்.
செல்பேசி 98422 75817

சணல் பைகள்

ஸ்ரீ துர்க்கையம்மன் மகளிர் சுய உதவிக் குழு
ஈரோடு மாவட்டம்.
செல்பேசி 93447 82493

மண் பொம்மைகள்

துளசி மகளிர் சுய உதவிக் குழு
தூத்துக்குடி மாவட்டம்.
செல்பேசி 94420 53646

வணிகம்

# வெற்றிக் காய்கறி கூட்டமைப்பு

நாகப்பட்டினம் மாவட்டம், மன்னம்பந்தல் ஊராட்சியில் 'வெற்றிக் காய்கறிக் கூட்டமைப்பு' என்ற பெயரில் நாங்கள் 12 பேர் இணைந்து வங்கிக் கணக்குத் துவங்கி செயல்பட்டு வருகிறோம். வாழ்ந்து காட்டுவோம் திட்டம் எங்களுக்கு பயிற்சிகள் பலவற்றை தந்து எங்களுக்குள் ஒரு தன்னம்பிக்கை ஏற்படுத்தியது. அதன்படி ஏதாவது ஒரு தொழிலை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் நாங்கள் இருந்தபோது வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் அமுதசுரபியின் மூலம் கடன் பெறலாம் என்பதை அறிந்து கடன் பெற்று தற்போது காய்கறி சாகுபடி தொழிலை மேற்கொண்டோம்.

இதன் மூலம் சாகுபடி செய்ய காய்கறிகளை உள்ளூரிலேயே விற்பனை செய்து வருகிறோம். முதலில் சாதாரணமாக ஆரம்பித்த இத்தொழில் இப்போது தழைத்து சிறப்பாக நடைபெற்று வருகிறது. சந்தையில் மற்றவர்கள் விற்பளை செய்யும் காய்கறிகளை விட நாங்கள் விளைவித்த காய்கறிகளை சற்று குறைவான விலைக்கு விற்பனை செய்வதால் நிறைய விற்பனை ஆகிறது. முதலில் கூலி வேலைக்கு சென்ற நாங்கள் இப்போது சுயமாக சம்பாதித்து வருகிறோம் என்பதை நினைக்கும் போது எங்களுக்கு வாழ்க்கையில் ஒரு நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

தற்போது சொந்த நிலத்திலேயே காய்கறிகளை சாகுபடி செய்து வருகிறோம். மேலும் விரிவாக காய்கறிகளை சாகுபடி செய்ய உள்ளூரிலேயே குத்தகைக்கு நிலத்தை பார்த்துள்ளோம். குறைந்த முதலீடு செய்து நிறைய இலாபம் பெறும் வகையில் மார்க்கெட்டில் விற்பனை செய்திட ஏற்பாடும் செய்து வருகிறோம். கை கொடுத்து கண்ணீர் துடைத்த வாழ்ந்து காட்டுவோம் திட்டத்திற்கு எங்களின் மனமார்ந்த நன்றி.

– வெற்றிக் காய்கறிக் கூட்டமைப்பு,
மன்னம்பந்தல், நாகை மாவட்டம்.

# நானும் சேமிக்கிறேன் நாளைக்காக...

என் பெயர் அலமேலுமங்கை. நான் நாகை மாவட்டம், கடலங்குடி களப்பகுதி, காளி ஊராட்சி, பழைய இ.பி. காலனியில் வசித்து வருகிறேன். எனக்கு இரு குழந்தைகள் உள்ளன. எனது குழந்தைகளின் சிறுவயதிலேயே எனது கணவர் இறந்து விட்டார். தற்போது என் மகன் ஆறாம் வகுப்பும், மகள் எட்டாம் வகுப்பும் படித்து வருகின்றனர். நான் எனது வயதான தாயாருடன் வசித்து வருகிறேன். எனது கணவர் வீட்டாரின் ஆதரவு எதுவும் எனக்கு கிடைப்பதில்லை. நான் வீட்டு வேலை செய்தும், பூ கட்டிக் கொடுத்தும் குடும்பத்தை நடத்தி வந்தேன்.

தற்போது வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் மூலம் ரூ. 15 ஆயிரம் கடன் தொகையினைக் கொண்டு இட்லி கடை வைத்து மாலை நேரத்தில் இட்லி வியாபாரம் செய்து வருகிறேன். ஒரு நாளைக்கு ரூ. 400/– வரை வருவாய் பெற்று வருகிறேன். தற்போது கடனை எல்லாம் அடைத்து விட்டு வரும் வருமானத்தில் சிறிது சேமித்தும் வருகிறேன். என் குழந்தைகளின் எதிர்கால கனவை நனவாக்க வாய்ப்பு அளித்த வறுமை ஒழிப்புச் சங்கத்திற்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

– திருமதி. அலமேலு மங்கை
காளி ஊராட்சி, கடலங்குடி களப்பகுதி,
நாகை மாவட்டம்.

## வாழ வழியில்லாமல் அன்று... வழிகாட்டியாய் இன்று...

எனது பெயர் சிவா, நான் நாகை மாவட்டம் உளுந்துக்குப்பை கிராமத்தில் வசித்து வருகிறேன். எங்கள் குடும்பம் இலக்கு மக்கள் பட்டியலில் உள்ளது. எங்கள் குடும்பத்தில் 6 குழந்தைகள் இருக்கின்றனர். மிகவும் ஏழைக் குடும்பம் என்பதால் உணவிற்குக் கூட வழியில்லாத நிலை.

அப்போது வாழ்ந்து காட்டுவோம் திட்டம் மூலம் ஜே.சி.பி. இயக்குபவர் பயிற்சிக்கு தேர்ந்தெடுக்கப்படுவதாக அறிந்தேன். உடனே நான் கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தினை அணுகி பயிற்சி பெறுவதற்கான விண்ணப்பத்தினை அளித்தேன். பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட எனக்கு விழுப்புரத்தில் ஜே.சி.பி. பயிற்சி அளிக்கப்பட்டது.

பயிற்சிக்குப் பின்னர் வேளாங்கண்ணியில் ஜே.சி.பி. இயக்குபவர் பணியில் மாதம் ரூ. 3000/– ஊதியம் பெற்று வந்தேன். எனது குடும்பத்தின் வறுமையும் தீர்ந்தது. தற்போது மயிலாடுதுறையில் ரூ. 4500/– ஊதியத்தில் பணி செய்து வருகிறேன். எங்களின் குடும்பத்திலும் மகிழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

என்னுடைய குடும்பத்தை வறுமையிலிருந்து மீட்டு நல்ல நிலைக்குக் கொண்டு செல்வேன் என்ற நம்பிக்கையை கொடுத்து, எனக்கும் என் குடும்ப வாழ்க்கைக்கும் வழிகாட்டிய வாழ்ந்து காட்டுவோம் திட்டத்திற்கு என் கோடி நன்றிகளை சமர்ப்பிக்கிறேன்.

– டி. சிவா, த/பெ. தங்கையன்,
மேலத் தெரு, உளுந்துக்குப்பை,
மயிலாடுதுறை வட்டம், நாகை மாவட்டம்.

## மண்வளம் பெற மழை வளம்... பால் வளம் பெற புல் வளம்...

பெயர் : மைதிலி (வயது 50)
தொழில் : குறு விவசாயி

முன்பிருந்த நிலை

எனது நிலத்தில் நெல் பயிரிட்டு விவசாயம் செய்து வந்தேன். இதில் இலாபமே இல்லை. கிடைக்கும் வருவாயில் சாப்பிடுவதற்கும், மற்ற செலவுகளுக்கும் போக விவசாயம் செய்ய கடன் வாங்க வேண்டிய நிலையில் இருந்தேன்.

தற்போதைய நிலை

வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் அமுதசுரபி நிதி மூலம் கடன் பெற்று ஒரு ஏக்கரில் ரூ. 7000/– செலவில் தீவனப்புல் சாகுபடி செய்தேன். அதன் மூலம் எனக்கு மாதம் ரூ. 6000/– வருமானமாகக் கிடைத்து வருகிறது. தீவனப்புல்லை சாப்பிடுவதால் மாடுகளும் அதிகமாகப் பால் கொடுக்கிறது. பாலில் அதிகச் சத்து உருவாகத் தீவனப்புல் உதவுகிறது.

நான் வாங்கிய விவசாயக் கடனை அடைத்து விட்டு தற்போது தீவனப்புல் சாகுபடி மூலம் நல்ல வருவாய் ஈட்டி வருகிறேன். எனது எதிர்கால கனவு மீன் வளர்ப்பு மற்றும் கால்நடைகளை வளர்த்து பால் வளத்தைப் பெருக்குதல் ஆகும். வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் மூலம் எனக்கு முன்னேற வாய்ப்பு கொடுத்ததற்கு நன்றி.

– மைதிலி,
கன்னியாநத்தம், காளி ஊராட்சி,
கடலங்குடி களப்பகுதி, நாகை மாவட்டம்.

## தொழிற்திறன் பயிற்சியால் பெற்ற தனித்திறன்...

நாகை மாவட்டம், சேத்தியாத்தோப்பு ஊராட்சி, அறையாபுரத்தில் வசிக்கும் எனது பெயர் வினோத். நான் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் மூலம் இளைஞர்களுக்கு தொழிற்திறன் பயிற்சியுடன் கூடிய வேலை வாய்ப்பு அளிக்கப்படுவதை அறிந்து மின்னணு குறித்து படித்துள்ள நானும் என் அக்காவும் எங்களுக்கு ஏதாவது பயிற்சி அல்லது வேலைவாய்ப்பு ஏற்படுத்தித் தர முடியுமா என வாழ்ந்து காட்டுவோம் திட்ட களப்பணியாளர்களிடம் கேட்டோம். அவர்களும் எனது கல்வித் தகுதியினை பரிசீலித்து பயிற்சிக்கு அனுப்பி வைப்பதாக கூறினார்கள். பெரிய நிறுவனத்தில் பயிற்சிக்கு என்னை அனுப்ப இவர்களால் முடியுமா என்று நினைத்தேன்.

ஆனால் ஒரு சில நாட்களிலேயே என்னை பயிற்சிக்கு அனுப்புவதாகவும், அதற்காக தயார் நிலையில் இருக்கும் படியும் கூறி, பயணச் செலவிற்கு ரூ. 1500/–ம் அனுப்பி வைத்தார்கள். நானும் இரண்டு மாத காலம் பயிற்சி பெற்றேன். பயிற்சி கால ஊக்கத் தொகையாக ரூ. 2000/–த்தையும் நிறுவனம் அளித்தது. இதனால் எவ்வித சிரமமும் இன்றி என்னால் பயிற்சியில் ஈடுபட முடிந்தது.

என்னால் நினைத்துக் கூட பார்க்க முடியாத நிறுவனத்தில் தற்போது நானும் ஒரு சிப்பந்தி. இந்த வாய்ப்பை எனக்கு அளித்து, எனது தொழில் திறனுக்கு மெருகூட்டி வாழ வழி செய்ய வாழ்ந்த காட்டுவோம் திட்டத்திற்கு எனது குடும்பத்தாருடன் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

– வினோத்,
அறையாபுரம், சேத்திரபாலபுரம் ஊராட்சி,
குத்தாலம் வட்டம், நாகை மாவட்டம்.

மின்னணு பிரிவில் உள்ள அனைத்துப் பயிற்சிகளையும் பெற்றபோது
தொழில்நுட்பக் கல்லூரியில் படித்தது போன்ற அனுபவம் எனக்கு கிடைத்தது.
இனி எங்கும் எனது திறமையை சொல்லி பணிபுரிய முடியும் என்ற நம்பிக்கை கிடைத்தது.

## கனவு நனவாகியது மாற்றுத் திறனாளியின் மாற்றத்தினால்...

நான் தங்கராசு. மருங்கூர் ஊராட்சியில் உள்ள ஒரு சில பெரிய குடும்பங்களில் எங்கள் குடும்பமும் ஒன்று. பெரிய குடும்பம் ஆனால் வருமானமோ மிகக் குறைவு. எங்கள் அப்பா நாங்கள் சிறுவர்களாக இருக்கும் போதே இறந்து விட்டார்கள். வருமானம் மிகமிகக் குறைவு. எனது சகோதரிகள் இருவருக்கும் எங்களது தாய் உறவினர்களின் துணையோடு வட்டிக்கு கடன் வாங்கி திருமணம் செய்து வைத்தார்கள். எனது அம்மாவுடன் வேலைக்கு சென்று வந்தேன்.

இந்நிலையில் எங்கள் பகுதிக்கு வாழ்ந்து காட்டுவோம் திட்டம் வந்தது. நாங்கள் இலக்கு மக்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டு அடையாள அட்டை பெற்றேன். மாற்றுத் திறனாளிகளுக்கு தொழில் தொடங்க கடன் வழங்கப்படுவதாக அறிந்து கொண்டு, நானும் கடன் பெற்று சுயமாக கடை வைத்தேன். கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தில் நடைபெறும் பயிற்சிகள் மற்றும் கூட்டங்களுக்கு என்னிடமே டீ, காபி மற்றும் தின் பண்டங்களை வாங்கி எனக்கு ஆதரவு தருகிறார்கள். இது எனக்கு தைரியத்தைக் கொடுத்தது.

தனிநபர்க் கடனாக ரூ. 5000/– பெற்று தேவையான உபகரணங்களை மேலும் வாங்கி கடையை விரிவுபடுத்தினேன். தற்போது நாள் ஒன்றிற்கு ரூ. 350/– முதல் ரூ. 450/– வரை வருவாய் கிடைத்து வருகிறது. எனது குடும்பமும் வறுமையின் பிடியில் இருந்து மீண்டு வருகிறது. இந்த வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்த வாழ்ந்து காட்டுவோம் திட்டத்திற்கு நன்றி.

– தங்கராசு,
மருங்கூர் ஊராட்சி,
திருமருகல் ஒன்றியம், நாகை மாவட்டம்.

# வெற்றி விநாயகர் கூட்டுப் பொறுப்புக் குழு

நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை வட்டம், அகரகீரங்குடி ஊராட்சியில் வசித்து வரும் நாங்கள் 9 பேர்கள் கொண்ட கூட்டுப் பொறுப்புக் குழுவை ஆரம்பித்தோம். வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் உதவியுடன் வங்கியில் புதிதாக கணக்குத் துவங்கினோம். அதன்பிறகு எங்கள் குழுவிற்கு பல பயிற்சிகள் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் அளித்தது. அதில் மிகக் குறைந்த முதலீடு செய்து அதிக இலாபம் தரும் காளான் வளர்ப்பு முறையை தேர்வு செய்து, அதற்கான சிறப்புப் பயிற்சியை, மங்கநல்லூர் கே.எஸ்.ஓ. பண்ணையில் பெற்றோம்.

அதன்பிறகு மன்னார்குடி வட்டாரம், வேள்குடி கிராமத்தில் நேரடி செய்முறைப் பயிற்சியில் கலந்து கொண்டோம். தற்போது எங்கள் கிராமத்தில் காளான் வளர்ப்புத் தொழிலை மேற்கொண்டு வருகிறோம். இந்தத் தொழில் மூலம் அதிக இலாபம் பெற்று எங்கள் உறுப்பினர்கள் அனைவரும் நல்ல முறையில் வாழ்ந்து வருகின்றனர்.

இத்தொழிலுக்குத் தேவைப்படும் மூலப் பொருட்களான நெல் வைக்கோல் மற்றும் காளான் விதை போன்றவற்றை தரமானவையாக வாங்குகிறோம். தற்போது காளான் கிலோ ஒன்று ரூ. 200/– வீதம் உள்ளூரிலேயே விற்பனை செய்து வருகின்றோம். செலவுகள் அனைத்தும் போக மீதமுள்ள தொகையை குழுவின் கணக்கில் சேர்த்து வருகிறோம்
.

காளான்களின் உற்பத்தியைப் பெருக்கி வாழ்க்கைத் தரத்தை உயர்த்த உறுதி மேற்கொண்டு செயலாற்றி வருகிறோம். எங்களுக்கு இந்த வழியை வகுத்துக் கொடுத்த வாழ்ந்து காட்டுவோம் திட்டத்திற்கு எங்களின் மனம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

– வெற்றி விநாயகர் கூட்டுப் பொறுப்புக் குழு,
அகரகீரங்குடி ஊராட்சி,
மயிலாடுதுறை வட்டம், நாகை மாவட்டம்.

# ஊனம் ஒரு குறையில்லை வென்று விடலாம்

பெயர் : கே. ரமேஷ் (வயது 30)
தொழில் : சைக்கிள் ரிப்பேர் கடை

குடும்ப நிலை

திருமணமாகி இரண்டு பெண் குழந்தைகள் உள்ளனர். நான், எனது மனைவி, 2 குழந்தைகள் மற்றும் தாய் தந்தையருடன் வாழ்ந்து வருகிறேன். குறைந்த வருமானம். தந்தையார் வேலை செய்ய இயலாத நிலையில் இருப்பவர்.

முன்பிருந்த நிலை

குறைந்த வருமானத்துடன் பற்றாக்குறையில் குடும்பம் நடத்தி வந்தேன்.

தற்போதைய நிலை

நான் ஒரு மாற்றுத் திறனாளி. எனக்கு இடதுகை ஊனமாக உள்ளது. ஒரு கை மட்டுமே செயல்படும். வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தில் ஊனமுற்றோர் கடன் பெற்று தற்போது 10 சைக்கிள்களை வாங்கி வாடகைக்கு விட்டும், ரிப்பேர் செய்தும் வருவாய் ஈட்டி வருகிறேன். கடை வாடகைக் கூட கொடுக்க முடியாத நிலையில் இருந்த நான் தற்போது கடையை விரிவுபடுத்தி மாதம் ரூ. 3500/– வரை வருமானம் ஈட்டி வருகிறேன். மேலும் வறுமை ஒழிப்புச் சங்கத்தில் ரூ. 15 ஆயிரம் கடன் பெற்று பேன்ஸி ஸ்டோரும் நடத்தி வருகிறேன்.

எங்கள் குழந்தைகளை நல்ல முறையில் வளர்க்கவும், தன்னம்பிக்கையுடன் வாழவும் வழிசெய்த வாழ்ந்து காட்டு வோம் திட்டம் மற்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்திற்கு எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

– கே. ரமேஷ்,
காளி ஊராட்சி, கடலங்குடி களப்பகுதி,
நாகை மாவட்டம்.

## வாழ வழிகாட்டிய தொலைபேசி

வாழ்ந்து காட்டுவோம் திட்டம் வருவதற்கு முன்னர் மிகவும் சிரமத்துடன் வாழ்ந்து வந்தேன். தற்போது இந்தத்திட்டத்தின் மூலம் பயனடைந்து தற்போது நீலப்பாடி கடைத்தெருவில் சிறியதாக கால் சர்வீஸ் மற்றும் உதிரி பாகங்கள் விற்பனை செய்யும் கடை ஒன்று வைத்து தற்போது மாத வருமானமாக ரூ. 6500/– வரை பெற்று வருகிறேன். இதன் மூலம் தற்போது என்னுடைய குடும்பம் நல்ல நிலையில் இருந்துவருகிறது. வாழ்ந்து காட்டுவோம் திட்டம் மேன்மேலும் வளர வேண்டும் என்று பிரார்த்திக்கிறேன்.

– அய்யப்பன்,<br>
நீலப்பாடி, அத்திப்புலியூர் ஊராட்சி,<br>
கீழ்வேளூர் வட்டாரம், நாகை மாவட்டம்.

## தையல் தொழிலால் தலைநிமிர்ந்த ரம்யா

நாகை மாவட்டம், பொன்னூர் ஊராட்சி, தோப்புத் தெருவை சேர்ந்தவர் ராஜாமணி. இவருக்கு மூன்று பெண் குழந்தைகளும் ஒரு ஆண் குழந்தையும் உண்டு. ராஜாமணியின் வருமானத்தைக் கொண்டு மிகவும் சிரமத்துடன் வாழ்ந்து வந்தனர். இவர் தனது ஊராட்சியில் செயல்பட்டு வரும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தின் மூலம் 9 வகுப்பு வரை படித்த தனது மகள் ரம்யாவை சென்னையில் இயங்கி வரும் இண்டிமேட் கம்பெனிக்கு நேரடி வேலைவாய்ப்பிற்கு அனுப்பி வைத்தார்.

பின்பு தனது மூத்தப் பெண் ரீனாவையும் அதே நிறுவனத்திற்கு வேலைக்கு அனுப்பி வைத்தார். இந்த இரண்டு பெண்களின் மாத வருமானமாக ரூ. 10 ஆயிரத்திற்கும் மேல் கிடைக்கிறது. ஒருவர் வருமானத்தின் மூலம் வாழ்க்கையை நடத்தி வந்தவர் இன்று 3 நபர்களின் வருமானத்தைக் கொண்டு வாழ்க்கையை சிறப்பாக நடத்தி வருகிறார்.

## மாவுத் தொழிலால் உயர்ந்த கௌரி மாரியம்மன் குழு

தனித்தனியே இருந்த இலக்கு மக்களை ஒருங்கிணைத்து உருவாக்கப்பட்டது தான் எங்கள் கௌரி மாரியம்மன் சுய உதவிக் குழு. குழு என்றாலே என்னவென்று தெரியாத எங்களை நன்மை பெற ஒருங்கிணைத்து ஒளி பெறச் செய்தது வாழ்ந்து காட்டுவோம் திட்டம். குழு தொடங்கி செயல்பட்டவுடன் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் மூலமாக ஆதார நிதி ரூ. 10 ஆயிரம் பெற்று, ஏதாவது தொழில் செய்ய முடிவெடுத்த போது குழுவின் உறுப்பினர்கள் ஒன்றிணைந்து இட்லி மாவு தயாரித்து விற்பனை செய்யலாம் என முடிவெடுத்து, கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மூலம் பெற்ற ரூ. 15 ஆயிரம் வளர்ச்சி நிதி மற்றும் சொந்த முதலீடு ஆகியவற்றைக் கொண்டு இரண்டு மாவு அறவை இயந்திரங்கள் மற்றும் மூலப் பொருட்களைக் கொள்முதல் செய்து நல்லாத்துக்குடி ஊராட்சியில் வாடகை கட்டடத்தில் தொழில் தொடங்கினோம்.

நாள் ஒன்றுக்கு 20 கிலோ முதல் 30 கிலோ வரை அரிசி, 3 கிலோ உளுந்து மற்றும் மூலப்பொருட்களை கொண்டு 80 பாக்கெட்டுகள் இட்லி மாவு தயார் செய்து, விற்பனை செய்வதன் மூலம் ரூ. 1800/– வரை வருமானம் பெற்று வருகிறோம். செலவுகள் ரூ. 640/– மற்றும் கடன் தவணை தொகை செலுத்தியது போக நாளொன்றிற்கு ரூ. 1000/– வரை கிடைக்கிறது.

பகுதி நேரத் தொழிலைக் கொண்டு எங்கள் தகுதியை உயர்த்திக் கொள்ள உதவிய வாழ்ந்து காட்டுவோம் திட்டம் எங்களையும் வாழ்ந்து காட்ட வைத்திருக்கிறது.

எங்கள் வாழ்க்கை முன்னேற உதவிய வாழ்ந்து காட்டுவோம் திட்டத்திற்கு நன்றிகள் பல.

# பாரதி கண்ட புதுமைப் பெண்

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் பிறந்த மண்ணில் பிறந்த என் பெயர் கௌசல்யா. பாரதி கண்ட புதுமைப் பெண்ணாய் எங்கள் பகுதி மக்கள் என்னை கருதக் காரணம் இன்று நான் மூன்று சக்கர வாகன ஓட்டி. அடுப்படியைத் தாண்டி ஆட்டோ ஓட்டுனராய் வந்ததன் காரணத்தை உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

எங்கள் கோடீஸ்வரி சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் முறையான சேமிப்பில் ஈடுபட்டு வந்தபோது எங்கள் ஊராட்சியில் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் செயல்பாட்டுக்கு வந்தது. அதன் மூலம் வழங்கப்பட்ட குழு பயிற்சிகளைத் தொடர்ந்து பெற்று நமது குழுவின் மூலம் ஏதாவது தொழிலை மேற்கொண்டு நிரந்தர வருமானம் ஏற்படுத்த வேண்டும் என்ற ஆர்வம் உறுப்பினர்கள் அனைவருக்கும் இருந்தது. ஆனால் என்ன செய்வது எனத் தெரியவில்லை. மேலும் குழுவில் உள்ள பலரும் தனிப்பட்ட முறையில் சுய தொழில் மேற்கொண்டு வந்தனர்.

இந்த நிலையில் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் வாயிலாக செயல்படுத்தப்படும் இளைஞர் தொழிற்பயிற்சி திட்டத்தின் மூலம் இலகுரக வாகன ஓட்டுநர் பயிற்சி அளிப்பதை அறிந்து கொண்ட நான், அத்திட்டத்தில் இணைந்து மூன்று சக்கர வாகனம் ஓட்டும் பயிற்சியினைப் பெற்றேன்.

எங்கள் பகுதியில் போதுமான ஆட்டோ வசதி இல்லாமல் இருந்ததால் ஆட்டோ ாங்க கடன் கேட்டு தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் விண்ணப்பித்தோம். ரூ. ஒரு இலட்சம் மானியத்துடன் ரூ. 1,45,000/– கடனாகப் பெற்று இன்று எங்கள் பகுதியில் வாடகைக்கு ஆட்டோ ஓட்டுவதன் வாயிலாக நாள் ஒன்றுக்கு ரூ. 300/– வரை வருவாய் கிடைக்கிறது. மேலும் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் மூலம் ஒத்த தொழில் செய்யும் குழுக்கள் கொள்முதல் செய்யும் பாலை மயிலாடுதுறையில் உள்ள ஹோட்டல்கள் மற்றும் கடைகளுக்கு ஆட்டோ மூலம் எடுத்துச் செல்ல தீர்மானித்துள்ளோம்.

– திருமதி. கௌசல்யா
மூவலூர் ஊராட்சி,
மயிலாடுதுறை வட்டம், நாகை மாவட்டம்.

Published by S.CHINNAPPAN, on behalf of MUTRAM SOCIETY From Tamil Nadu Corporation for Development of Women Ltd, No: 100 Anna Salai, Guindy, Chennai – 600 032 (55,000 Copies circulated) an Printed by V. RAMESH, CHENNAI MICRO PRINT PRIVATE LTD, New 130 Old no.34, Nelson Manickam Road, Aminjikarai, Chennai - 29. Editor: S.CHINNAPPAN.

Toll Free No. 18004191800
எச்.ஐ.வி இருந்தாலும்
எல்லோரையும் போல
எங்களாலும் சிறப்பாக
வேலை செய்ய முடியும்
எங்களுக்குத்
தேவை சம வாய்ப்பு
செந்தில் குமார்
எச்.ஐ.வி–யுடன் வாழ்பவர்
தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம்
தொலைபேசி : 044–2819 0891, 2819 0467

RNI No. TNTAM/1999/02733-TAMILNADU MAKLIR MAMPATTU MURTRAM R.DIS 2435/2010
Reg. No. TN/CC(S)Dn./64/09-11 & Licensed to Post Under without Prepayment No. 564 / 09 - 11